

# மரணத்திற்குப் பின்பும் கூட வருபவை

## தட்டவர்த்தி வீரராகவராவ்

Rs.90/-

# மரணத்திற்குப் பின்பும் கூட வருபவை



எழுதியவர் : தடவர்த்தி வீரராகவராவ்

மொழிப் பெயர்ப்பு : ப. ஸ்வப்னா

திருத்தம் : பொ. சுப்பிரமணியம்

விலை : **Rs.90/-**


**புத்தகங்களைப் பெற**
**தட்டவர்த்தி வீரராகவராவு**
தட்டவர்த்திவாரி வீதி, பீமவராம் - 1
வெஸ்ட் கோதாவரி, ஆந்திரபிரதேஷ்
செல் : 9490171853, 9440309812

## பொருளடக்கம்


1. மரணத்திற்குப் பின்பும் கூட வருபவை 3
2. வாசனைகள் (விருப்பங்கள்) 5
3. சம்ஸ்காரங்கள் (பழக்கவழக்கங்கள்) 12
4. கர்மவினைகள் 32
5. கர்மா - அகர்மா (ஸ்ரீ கிருஷ்ணர் கூறிய போதனை) 46
6. தியானம் என்றால்? 52
7. கர்மாவில் அகர்மா- அகர்மாவில் கர்மா (ஸ்ரீ கிருஷ்ண பகவான்) 58
8. ஞானம் (அறிவு) 65
9. ஞானம் பெறுவதால் உண்டாகும் நன்மைகள் 78



**To watch Tatavarthy's zoom sessions:**

a) Silence meditation from **4 am** to **6.30 am** followed by messages related to soul-knowledge from **6.30 am** to **7.30 am**
Zoom ID: **2413823868** Password: **RAO**

b) The above-mentioned Zoom session will also be livestreamed on **YouTube** from **6.30am to 7.30am.**

c) Those who are in the TVR & TRL WhatsApp group will receive Zoom and YouTube links, along with details about the Tatavarthy's classes. They must save Sindhura's phone number: **8555995217**

d) Those who wish to join the Tatavarthy's WhatsApp group can contact Sindhura: 8555995217, Madhu: 7893917364 or visit www.tst.org.in and click on the "Join WhatsApp Group" link.

# மரணத்திற்குப் பின்பும் கூட வருபவை

கடந்த சில ஆண்டுகளாக நாம் செய்து வரும் ஆன்மீகப் பயிற்சிகளாலும் மற்றும் பெற்று வரும் ஞானத்தாலும் இந்த ஆன்மீகப் பாதையில் நாம் எவ்வளவு முன்னேறுகிறோமோ, அது அனைத்தும் நமது அடுத்த பிறவிக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இன்று நாம் அதிக பணம் சம்பாதித்தால், அது நமது எதிர்கால வாழ்க்கைக்குப் பயனளித்து, நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

அதேபோல், இன்று நாம் கற்கும் கல்வி நாளை நாம் மேலும் வளர்வதற்கு உதவும். நீங்கள் உயர்நிலைப் பள்ளியில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றால் கல்லூரிக்குச் செல்வீர்கள், கல்லூரியில் தேர்ச்சி பெற்றால் முதுகலைத் (Post Graduation) பட்டப்படிப்பிற்க்குச் செல்வீர்கள். அவ்வாறு கடினமாக படிப்பது என்றும் வீணாகாது, அது எதிர்கால வளர்ச்சிக்கு பயனுள்ளதாக இருக்கும்.

அதுபோலவே, இப்பிறவியில் நாம் கடினமாக உழைத்து சாதிப்பது வீணாகாது, மறுபிறவிக்கு அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஒரு வகுப்பில் தேர்ச்சி பெற்றால் அடுத்த வகுப்பிற்குச் செல்கிறோம். அவ்வளவுதானே தவிர, அந்த வகுப்பிலிருந்து மீண்டும் கீழே வருவதில்லை. அவ்வாறே, இப்பிறவியில் கற்றுக்கொண்டவையும், சாதித்தவையும் அடுத்த பிறவிக்கு பயனுள்ளதாக இருக்கும். எனவே, இப்பிறவியில் பட்ட கஷ்டமோ அல்லது செய்த சாதனைகளோ எதுவுமே வீணாவதில்லை.

இங்கே எவ்வளவு கடினமாக உழைக்கிறீர்களோ, அது அனைத்தும் எதிர்கால நன்மைக்காகவே இருக்கும். எல்லோரும் என்ன நினைக்கிறார்கள் என்றால், "இறந்துவிட்டால் எல்லாம் முடிந்துவிடும், இனி எதுவும்

இருக்காது" என்று நினைக்கிறார்கள். ஆனால் இறந்த பிறகும் நாம் வாழ்வோம், அதுமட்டுமின்றி, நாம் செய்தவையும், சாதித்தவையும் கூட வீணாவதில்லை. பலருக்குத் தெரிந்தது என்னவென்றால், "உடலை எரித்துவிடுவார்கள் அல்லவா? எஞ்சியிருப்பது வெறும் சாம்பல்தானே" என்று நினைக்கிறார்கள். ஆனால் உடல் மட்டுமே எரியும், இங்கே நாம் செய்தவை மட்டும் வீணாவதில்லை. எனவே, நாம் இங்கு என்ன செய்கிறோம், என்ன சாதிக்கிறோம், என்ன கற்றுக்கொள்கிறோம், என்ன பெறுகிறோம்? என்பதைத் தெரிந்து கொள்வோம்.

நமது தற்போதைய வாழ்க்கை என்பது கடந்த பிறவியில் நாம் செய்தவை மற்றும் நம்முடன் தொடர்ந்து வந்தவற்றைப் பொறுத்தே அமைந்துள்ளது. அதேபோல், இப்போது நாம் செய்தவை மறுபிறவிக்கு பயனுள்ளதாக இருக்கும்.

எனவே, நம்மோடு தொடர்ந்து வருபவை எவை என்பதைத் தெரிந்துகொள்வோம்.

நம்முடன் வருபவற்றை நான்கு வகைகளாகக் கூறலாம், அவை:1.வாசனைகள், 2.சம்ஸ்காரங்கள், 3. கர்மவினைகள், 4.ஞானம்

1.வாசனைகள் என்பதை ஆர்வங்கள் அல்லது விருப்பங்கள் என்று கூறலாம்.

2.சம்ஸ்காரங்கள் என்றால் பழக்கவழக்கங்கள்.

3.கர்மவினைகள் என்றால் செய்த செயல்கள் மற்றும் பேசிய வார்த்தைகள்.

4. ஞானம் என்றால் ஆன்மாவிற்கு நன்மை அளிப்பது மற்றும் ஆன்மாவிற்கு உயர்வைத் தருவதாகவும்.

இவை அனைத்தும் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும், ஒருவர் இறந்த பிறகும் அவருடன் தொடர்ந்து வரும். இவற்றைப் பற்றி இன்னும் சற்று விரிவாகத் தெரிந்துகொள்வோம்.

# வாசனைகள்

## (விருப்பங்கள்)

இந்த வாசனைகள் மூன்று வகைப்படும்:

1. தேக வாசனை, 2. லோக வாசனை, 3. சாஸ்திர வாசனை.

1. தேக வாசனை: தேகத்தின் மீதான பற்றினால், அதாவது உடலோடு ஒன்றிப்போவதை தேக வாசனை என்பர்.

2.லோக(உலக) வாசனை: மனதிற்கு அடிபணிந்து, மனதோடு ஒன்றிப்போவதே லோக வாசனை என்பர்.

3.சாஸ்திர வாசனை: புத்தியைப் பயன்படுத்தி, புத்தியோடு ஒன்றிப்போவதை, அதாவது புத்தியினால் செய்யப்படும் செயல்கள் அனைத்தையும் சாஸ்திர வாசனை என்பர்.

ஒரு விதத்தில், இந்த மூன்று வாசனைகளும் மனிதர்களுக்கு இரும்பு சங்கிலிகள் போன்றவை. இவை துக்கத்தைப் போக்காது, இவற்றால் மனிதன் மோட்சத்தை அடைய முடியாது.

எனவே, இந்த தேக வாசனையைப் பற்றி இன்னும் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

**1.தேக வாசனை**: உடலுக்காகச் செய்யப்படும் அனைத்தும் தேக வாசனைகள் ஆகும். சம்சாரம், குடும்பம், மனைவி, கணவன், பிள்ளைகள், உறவினர்கள் போன்றவர்களின் மீது கொண்ட பற்றினால் அவர்களுக்காகவே வாழ்வது, தனது நேரம் மற்றும் வாழ்க்கை முழுவதையும் அவர்களுக்காகவே செலவிடுவது தேக வாசனை எனப்படும்.

யாராவது கேட்டால், இதைத் தவிர வேறு என்ன இருக்கிறது? இன்னும் என்ன செய்ய வேண்டும்? இதுவே எனது கடமை என்று கூறுவார்கள். அவ்வாறே, இறக்கும்

வரை அவர்களுக்காகவே கஷ்டப்படுவதும், உழைப்பதும் தேக வாசனை எனப்படும்.

அவர்களுக்கு உடலைத் தவிர வேறு எந்தச் சிந்தனையும் இருக்காது. எப்போதும் உடலின் சுகம், உடலின் ஆரோக்கியம், உடலமைப்பு, உடலின் அழகு ஆகியவற்றைத் தவிர வேறு எதையும் நினைக்க மாட்டார்கள். இவை அனைத்தும் தேக வாசனைகளே.

ஒரு விதத்தில், இந்த உடல் என்பது "நோய்களின் குடில்" போன்றது என்ற உண்மையை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இதைத் தெரிந்துகொண்டால், இந்த உடலின் மீதுள்ள பற்றும், அபிமானமும் குறையும். யோகிகள் உடலை 'மலபாண்டம்' (அழுக்கு நிறைந்த பாத்திரம்) என்று கூறியுள்ளனர்.

2. **லோக வாசனை**: இது மனதிற்குச் சம்பந்தப்பட்டது. அவர்களிடம் மனதின் ஆதிக்கம் அதிகமாக இருக்கும். அவர்கள் உலகத்திற்காகவும், உலக மக்களுக்காகவும் அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். அவர்களுக்கு மன ரீதியான ஆசைகள் அதிகமாக இருக்கும். அதாவது, அனைத்துத் துறைகளிலும் மற்றவர்களை விட மேலானவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள், அதற்காகவே தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவிடுவார்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒரு துறையின் மீது விருப்பம் இருக்கும். அவர்கள் அதில் நிபுணராகவோ அல்லது வெற்றியாளராகவோ ஆக வேண்டும் என்று தங்கள் நேரத்தையும், முழு சக்திகளையும் அதற்காகவே செலவிடுவார்கள். அவ்வாறு சிலர் இசையின் மீதும், சிலர் விளையாட்டின் மீதும், சிலர் சினிமா மீதும், சிலர் அரசியல் மீதும், இன்னும் சிலர் பணம் சம்பாதிப்பதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்கள். அவர்களின் மனம் அதையே விரும்பும், அதையே நாடும்.

அதனால் அவர்கள் அந்த வேலையை தொடர்ந்து செய்து கொண்டிருப்பார்கள். அதற்கு முதலிடம் கொடுப்பார்கள், அதாவது தங்களுக்குப் பிடித்தமானவற்றிற்கே முக்கியத்துவம் கொடுப்பார்கள். வேறு எதன் மீதும் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. அவர்கள் தங்களைக் காட்டிலும் மற்றவர்களைப் பற்றியே அதிகமாகச் சிந்திப்பார்கள். இதனையே "லோக வாசனை" என்பர்.

3. **சாஸ்திர வாசனை**: ஒரு விதத்தில், இது புத்திக்குச் சம்பந்தப்பட்டது. புத்தி நிலையில் இருப்பவர்கள் செய்யும் செயல்கள் அனைத்தும் இதுபோலவே இருக்கும்.

அவர்கள் சாஸ்திரங்கள் அனைத்தையும் ஆழமாக் கற்பாற்கள். அவற்றை முழுமையாக நம்பி, அதற்கேற்ப வாழ்வதற்கு முயற்சிப்பார்கள். இதனையே "சாஸ்திர வாசனை" என்பர்.

நாம் கவனித்துப் பார்த்தால், உடலின் மீது பற்றுள்ளவர்கள் உடல் சார்ந்த செயல்களையே செய்வார்கள். அதேபோல், லோக வாசனையின் மீது பற்றுள்ளவர்கள் மனம் சார்ந்த செயல்களையேச் செய்வார்கள். புத்தியின் மீது பற்றுள்ளவர்கள் புத்தி சம்பந்தமான வேலைகளைச் செய்து கொண்டிருப்பார்கள்.

இங்கு என்ன நடக்கிறது என்றால், மனிதர்கள் எதில் ஆர்வம் கொண்டு அந்த வேலைகளைச் செய்கிறார்களோ, அந்த வாசனைகளே, அந்தப் பற்றுகளே அடுத்த பிறவிக்கும் கூட வரும். அவர்கள் இந்தப் பிறவியில் எப்படி வாழ்கிறார்களோ, அப்படியே மறுபிறவியிலும் வாழ்வார்கள், வேறொரு விதமாக வாழ மாட்டார்கள். உதாரணமாக, கடந்த பிறவியில் ஒருவர் சிறந்த இசை மேதையாக இருந்திருந்தால், இந்தப் பிறவியில் சிறுவயதிலிருந்தே அற்புதமாகப் பாடல்களைப் பாடுவார்கள்.

இந்தப் பிறவியில் மிகச் சிறு வயதிலேயே ஒருவர் பகவத் கீதை ஸ்லோகங்களைச் சொல்கிறார் என்றால், அவர் கடந்த பிறவியில் பகவத் கீதையில் பேரறிஞராக இருந்திருப்பார் என்று நாம் தெரிந்து கொள்ளலாம்.

அதேபோல், ஒருவர் இளம் வயதிலேயே கார் ஓட்டினால், அவர் கடந்த பிறவியிலேயே வாகனம் ஓட்டுவதில் (driving) நிபுணராக இருந்திருப்பார் என்று கருதலாம். இது போன்ற விஷயங்களை யூடியூப்பில் (YouTube) பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். முக்கியமாக அவை அனைத்திற்கும் காரணம் கடந்த பிறவியிலிருந்து வந்த வாசனைகளே என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த வாசனைகள் அல்லது ஆர்வங்கள் பிறவிதோறும் ஜீவனை விட்டுப் பிரியாமல் தொடர்கின்றன. எனவே, இந்தப் பிறவியில் உள்ள பற்றுகளும் விருப்பங்களும் நம்மை விட்டுப் போகாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகையால், ஒவ்வொருவருக்கும் மறுபிறவி உண்டு என்பதால், இந்தப் பிறவியில் நாம் நல்ல வாசனைகளையும், நல்ல விருப்பங்களையும் கொண்டிருக்க வேண்டும்.

அப்போதுதான் அவை எதிர்காலத்தில், அதாவது மறுபிறவிக்கு நமக்கு மிகவும் உதவியாக இருக்கும். அதனால், இந்தப் பிறவியில் சாதித்ததும் செய்ததும் வீணாகாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே, இந்தப் பிறவியில் நீங்கள் பிள்ளைகள் மீதோ, மனைவி மீதோ, கணவன் மீதோ அல்லது பணத்தின் மீதோ அதிகப் பற்று வைத்திருந்தால், அது இந்தப் பிறவியோடு முடிந்து விடாது, அடுத்த பிறவியிலும் அதே பற்றுடன் இருப்பீர்கள். அத்தகையவர்கள் ஆன்மீகத்தின் மீது ஆர்வம் காட்ட மாட்டார்கள், ஞானத்தைப் பெற முயற்சி செய்ய மாட்டார்கள்.

ஆனால், மனைவி மீதோ, கணவர் மீதோ, பிள்ளைகள் மீதோ அல்லது செல்வத்தின் மீதோ பற்று வைத்திருப்பவர்களுக்கு மோட்சத்தின் மீது ஆர்வம் இருக்காது. அவர்கள் துயரத்திலிருந்து விடுபட முயற்சி செய்யமாட்டார்கள். ஆனால் கஷ்டங்கள் வரும்போது மட்டும், "என் நிலைமை இப்படி ஆகிவிட்டதே, என் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே, நான் என்ன செய்வேன்?" என்று மிகவும் வருந்துவார்கள்.

எனவே, இந்த பிறவியில் தேக வாசனைகள் (உடல் மீதான பற்று) மற்றும் உலக வாசனைகளைத் துறந்தால் மட்டுமே, அடுத்த பிறவியிலாவது ஆன்மீக ஆர்வம் அதிகரித்து மோட்சத்திற்காக முயற்சிப்பார்கள்.

யாரெல்லாம் துயரத்திலிருந்து விடுபட வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் இந்த மூன்று வகையான வாசனைகளிலிருந்து (பதிவுகள்/ஆசைகள்) விடுபட வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு மோட்சம் கிடைக்கும். அதனால்தான் "வாசனாக்ஷயமே மோட்சம்" (ஆசைகள் அழிவதே மோட்சம்) என்று கூறப்படுகிறது.

எவருக்கும் பிறப்பு என்பது தப்பாது, உடல் எடுப்பது தப்பாது, ஞானத்தைப் பெற முயற்ச்சிப்பதும் தப்பாது. ஆனால் அதற்கு இந்த வாசனைகளே தடையாக இருக்கின்றன. இந்த வாசனைகள் கண்ணுக்குத் தெரியாது, ஆனால் அவை தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும்.

**உதாரணம்:** ஒரு பெருங்காயட பெட்டியில் பெருங்காயத்தை வைத்திருந்து, சில காலம் கழித்து அதை எடுத்துவிட்டு, அந்தப் பெட்டியைச் சுத்தமாகக் கழுவினாலும், அந்தப் பெருங்காய வாசனை அப்படியே இருக்கும்.

அதேபோல், இந்தப் பிறவியில் குடும்பத்தையும் செல்வத்தையும் றந்துவிட்டாலும், அடுத்த பிறவியில்

குடும்பத்தின் மீதும் செல்வத்தின் மீதும் உள்ள "ஈர்ப்பு" மற்றும் "விருப்பம்" நீங்குவதில்லை. அது தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும். அப்படிப்பட்டவர்களுக்கு யார் எவ்வளவு சொன்னாலும் புரியாது.

"நீ உடல் அல்ல, நீ மனம் அல்ல, நீ புத்தி அல்ல, நீ ஆன்மா" என்று எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் அவர்களுக்குப் புரியாது. அதற்கு முக்கியக் காரணம் வாசனைகளே.

எனவே, இனியாவது அத்தகைய இழப்பை ஏற்படுத்தும் வாசனைகளை விட்டுவிட வேண்டும்.

அதனால்தான் பத்ரிஜி அவர்கள் இந்த நான்கு செயல்களைச் செய்யச் சொன்னார்.

1.மூச்சின் மீது கவனம் வைத்துத் தீவிர தியான சாதனை செய்தல். 2. அறிவுப்பூர்வமான புத்தகங்களைப் படித்தல். 3.ஞானம் நிறைந்த செய்திகளைக் கேட்டல். 4.இந்த வழியில் சேவை செய்தல். இந்தப் பிறவியில் எப்போது இவற்றைச் செய்கிறீர்களோ, அந்த நல்வாசனைகளே அடுத்த பிறவிக்கும் உங்களைத் தொடர்ந்து வரும்.

இந்த தியான மார்க்கத்திற்கு வருமாறு நாம் பலரை அழைக்கிறோம், ஆனால் அவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை. அதற்குக் காரணம், அவர்கள் கடந்த பிறவிகளில் இதன் மீது ஆர்வம் காட்டாததுதான். அதனால்தான், கடந்த பிறவியின் சம்ஸ்காரங்கள் (புண்ணியம் அல்லது நற்பதிவுகள்) உள்ளவர்கள் மட்டுமே ஞான மார்க்கத்திற்கு வருவார்கள் என்று கூறுகிறோம்.

பாருங்கள் நம்முடைய பீமாவரம் வகுப்புகளுக்கு எத்தனை ஊர்களிலிருந்து வருகிறார்கள்? அதன் அர்த்தம் என்னவென்றால், அந்த ஊர்களில் பல ஆயிரக்கணக்கான அல்லது லட்சக்கணக்கான மக்கள் இருக்கலாம், ஆனால் வருவது என்னவோ இரண்டு அல்லது மூன்று பேர்

மட்டுமே! பிறகு ஏன் மற்றவர்கள் ஞானத்தின் மீது ஆர்வம் காட்டுவதில்லை? ஏனெனில், கடந்த பிறவியில் அவர்களுக்கு மற்ற விஷயங்களின் மீது ஆர்வம் இருந்ததே இதற்குக் காரணம்.

எது எப்படியிருந்தாலும், இந்தப் பிறவியில் நாம் செய்யும் முயற்சி வீணாகக் கூடாது. ஏனென்றால், இந்தப் பிறவியில் நாம் எதைச் சாதிக்கிறோமோ, அது அடுத்த பிறவிக்கு மிகவும் பயனுள்ளதாகவும் லாபகரமாகவும் இருக்கும்.

இந்த வருடம் நாம் கஷ்டப்பட்டுப் படித்தால் அடுத்த வகுப்பிற்குச் செல்வோம் அல்லவா? அதேபோல், இந்தப் பிறவியில் நாம் முயற்சி செய்தால் அடுத்த பிறவியில் ஆன்மீக ரீதியாக இன்னும் உயர்ந்த நிலையை அடையலாம். எனவே, நாம் செய்தவை அனைத்தும் நம்மைத் தொடர்ந்து வரும் என்பதை மறந்துவிடக் கூடாது.

ஆனால் ஒன்று மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்... நீங்கள் எதன் மீது பற்று வைத்திருக்கிறீர்களோ, அந்த உறவினர்கள் வரமாட்டார்கள், அந்தப் பிள்ளைகள் வரமாட்டார்கள், மனைவி வரமாட்டாள், கணவன் வரமாட்டான், செல்வம் வராது. ஆனால், அவர்கள் மீது நீங்கள் வைத்திருக்கும் அந்த "பற்றும் ஆசையும்" மட்டுமே உங்களைத் தொடர்ந்து வரும்.

அதனால்தான், அடுத்த பிறவியிலும் மீண்டும் அதே போன்ற வாழ்க்கையையே நீங்கள் விரும்புவீர்கள். எனவே, எதிர்காலத்தைச் சிறப்பாக வடிவமைத்துக் கொள்ள வேண்டும். இப்போது இருப்பதே நிலையானது என்று நினைக்க வேண்டாம்.

# சம்ஸ்காரங்கள்

(பழக்கவழக்கங்கள்)

முன்பு நாம் 'வாசனைகள்' (பதிவுகள்) பற்றிப் பேசினோம். இப்போது சம்ஸ்காரங்களைப் பற்றிப் பார்ப்போம். சம்ஸ்காரங்கள் என்றால் பழக்கவழக்கங்கள் என்று பொருள். இவை மூன்று வகைப்படும் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

அவை: 1. மண் கட்டி சம்ஸ்காரங்கள்.

2. மரக்கட்டை சம்ஸ்காரங்கள்.

3. பாறாங்கல் சம்ஸ்காரங்கள்.

கவனித்துப் பாருங்கள், ஒரு மண் கட்டியைத் தண்ணீரில் போட்டால் சிறிது நேரத்திலேயே அது கரைந்துவிடும். அதே சமயம், ஒரு மரக்கட்டையைத் தண்ணீரில் போட்டால், அது மெதுவாக என்றாவது ஒரு நாள் மென்மையாகும். ஆனால், ஒரு பாறாங்கல்லைத் தண்ணீரில் போட்டால், பல யுகங்கள் அப்படியே வைத்திருந்தாலும் அது மாறாமல் அப்படியே தான் இருக்கும்.

நம்முடைய பழக்கவழக்கங்களையும் பெரியோர்கள் இதே போலத்தான் வகைப்படுத்தியுள்ளனர். இவற்றைக் கொண்டு நாம் எத்தகைய சம்ஸ்காரங்களை நமக்குள் கொண்டு வந்துள்ளோம் என்பதை எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

**1) மண் கட்டி சம்ஸ்காரங்கள்:** யார் ஒருவருக்கு சில தவறான பழக்கங்கள் இருக்கிறதோ, அவர்களுக்குப் பெரியோர்களோ, குருமார்களோ அல்லது யோகிகளோ (உதாரணமாக புத்தர், கிருஷ்ணர், பத்ரிஜி போன்ற ஞானிகள்) "உன்னுடைய இந்தப் பழக்கங்கள் தவறானவை, இவற்றால் நீ பெரிதும் நஷ்டமடைவாய்,

துன்பப்படுவாய், எனவே இவற்றை மாற்றிக்கொள்" என்று அறிவுறுத்துவார்கள்.

அவர்கள் அந்த அறிவுரையைக் கேட்டவுடன், ஒரு மண் கட்டியை தண்ணீரில் போட்டவுடன் எப்படிக் கரைந்துவிடுமோ, அதேபோல் இவர்களும் தங்கள் தவறுகளை புரிந்து கொண்டு, அவர்கள் சொன்னதை கேட்டு உடனடியாகத் தங்கள் பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்வார்கள்.

மனிதர்களில் இத்தகையவர்களும் இருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை நான் இந்தத் தியான மார்க்கத்திற்கு வந்தபோது, பத்ரிஜி அவர்கள் எங்களுடைய தியான மையத்திற்கு வந்திருந்தார்.

நான் அந்தத் தியான மையத்தின் சுவர்களில் ஒரு பக்கம் 'பெண்கள்', இன்னொரு பக்கம் 'ஆண்கள்' என்றும் பெரிய எழுத்துக்களில் எழுதி வைத்திருந்தேன். அதாவது, பெண்கள் அமரும் இடம், அதேபோல் ஆண்கள் அமரும் இடம் என்று குறிப்பிடும் வகையில் எழுதி வைத்திருந்தேன்.

பத்ரிஜி அவர்கள் அதைப் பார்த்து சிரித்துவிட்டு, ரயில் நிலையங்களில் உள்ள கழிவறைகளில் தான் பெண்கள், ஆண்கள் என்று எழுதி வைத்திருப்பார்கள். அதை நீக்கிவிட்டு, அந்தப் பக்கம் 'அஹம் பிரம்மாஸ்மி' என்றும், இன்னொரு பக்கம் 'தத்வமஸி' என்றும் எழுதுங்கள் என்று கூறினார். அவர் சொன்னது எனக்கு நன்றாகப் புரிந்தது. உடனே அதை மாற்றி எழுதி வைத்தேன்.

அதேபோல், தியான மையத்திற்கு வெளியே நமது சங்கத்தின் (Society) லோகோவை வைக்குமாறு சொன்னார். எந்த ஒரு கோயிலிலோ அல்லது மையத்திலோ இது போன்ற மாற்றங்களைச் செய்யச் சொன்னால் பொதுவாக யாரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால் அவர்

சொன்னது எனக்குப் புரிந்தது. உடனடியாக அந்த மாற்றத்தையும் செய்தேன்.

அப்போதுதான் என்னுடையது 'மண் கட்டி சமஸ்காரம்' என்று எனக்குப் புரிந்தது. அதாவது, பெரியோர்கள் உண்மையைச் சொல்லும்போது, அதை உணர்ந்து உடனே மாற்றிக்கொள்வதையே 'மண் கட்டி சம்ஸ்காரம்' என்பார்கள்.

அதேபோல், அவர் தனது 18 கொள்கைகளில் "உருவ வழிபாடு வேண்டாம், தியான வழிபாடே சிறந்தது" என்று கூறியிருந்தார். ஆனால் நானோ வெங்கடேஸ்வர சுவாமியின் தீவிர பக்தன், அவருக்காகத் தனியாக ஒரு கோயிலையே கட்டியிருந்தேன்.

ஆரம்பத்தில் பத்ரிஜி அவர்கள் மூன்று நாட்கள் தியான யாகத்தை ஏற்பாடு செய்திருந்தார். அப்போது முதல் நாள் சனிக்கிழமை வந்தது. பத்ரிஜி அவர்கள் வந்திருந்த அனைவரையும் தியானம் செய்ய வைத்துக் கொண்டிருந்தார். ஆனால் அன்று சனிக்கிழமை என்பதால், எங்களுடைய வழக்கப்படி நாங்கள் இருவரும் கோயிலில் பூஜை செய்து கொண்டிருந்தோம். பூஜை முடிந்த பிறகு, தியான அறைக்குள் வந்து அமர்ந்தோம்.

நாங்கள் அறைக்குள் வருவதைக் கவனித்த பத்ரிஜி அவர்கள், மேடையில் தியானம் செய்பவர்களை அப்படியே விட்டுவிட்டு, நாங்கள் இருந்த அறைக்குள் வந்தார். கொஞ்சம் தீவிரமாக (கோபமாக அல்ல, அழுத்தமாக), எங்கே சென்றிருந்தீர்கள்? என்று எங்களிடம் கேட்டார்.

ஒவ்வொரு வாரமும் பூஜை செய்யும் பழக்கம் எங்களுக்கு உண்டு என்பதால் பூஜை செய்ய சென்றிருந்தோம் என்று கூறினோம். அப்போது அவர், பூஜை ஏன் செய்தீர்கள்? என்று அவர் கேட்டார். அவர் அப்படி கேட்பதற்குக் காரணம், வெளியே தியானம் நடந்து

கொண்டிருக்கும்போது நாங்கள் கோயிலுக்குள் பூஜை செய்து கொண்டிருந்ததுதான்.

நாங்கள் அவருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல், "அந்தப் பூஜை செய்ததால்தான் உங்களைப் போன்றவர்களின் அறிமுகம் எங்களுக்குக் கிடைத்ததோ என்னவோ" என்று கூறினேன். அதற்கு அவர், "நீ பூஜை செய்ததால்தான் என்னை போன்றவர்களின் அறிமுகம் இவ்வளவு தாமதமானது" என்று கூறினார். நான் ஏதோ லாபம் என்ற கணக்கில் சொன்னால், அவரோ அது எனக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியது என்று கூறினார்.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு நான் பகவத் கீதை, உபநிடதங்கள், புராணங்களைப் படிக்க நேர்ந்தது. பத்ரிஜி அவர்களின் வீடியோக்களையும் கேட்கத் தொடங்கினேன். அப்போது பத்ரிஜி அவர்கள் சொன்னதுதான் சத்தியம் என்று தெரிந்து கொண்டேன்.

அதுமட்டுமல்லாமல், சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களின் 'சத்யார்த்த பிரகாசம்' என்ற புத்தகத்தைப் படித்தபோது, பூஜை என்பது ஒரு படி அல்ல, அது ஒரு அகழி என்று அவர் சொன்ன வார்த்தைகளும், பத்ரிஜி சொன்ன வார்த்தைகளும் ஒன்றாக இருந்தன. 'படி' என்றால் மேலே ஏறுபவர் லாபம் அடைந்தவன் என்று பொருள், 'அகழி' என்றால் குழியில் விழுந்தவர் நஷ்டமடைந்தவர் என்று பொருள் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

அப்போது பத்ரிஜி அவர்கள் ஏன் பூஜையை வேண்டாம் என்று சொல்கிறார்? அதில் என்ன நஷ்டம்? தியானம் ஏன் செய்யச் சொல்கிறார்? அதில் என்ன லாபம்? என்பது குறித்து நான் ஆய்வு செய்தேன்.

இயல்பாகவே நான் கோயிலில் அமர்ந்திருக்கும்போது அன்னமாச்சார்ய கீர்த்தனைகளை கேட்பதுண்டு. ஒருநாள் "பிரம்மமொக்கடே பரபிரம்மமொக்கடே" என்ற பாடலில்,

"ஹீனாதிக்கமுலு எந்துலேவு, அந்தரிகி ஸ்ரீஹரே அந்தராத்மா" (தாழ்வு உயர்வு என்பவை எங்கும் இல்லை, அனைவருக்கும் அந்த ஸ்ரீஹரியே அந்தராத்மா) என்ற வரியைக் கேட்க நேர்ந்தது. அதன் பொருளும் எனக்குப் புரிந்தது.

அதாவது, இந்த பிரபஞ்சத்தில் தாழ்ந்தது, உயர்ந்தது என்று எதுவும் இல்லை; அதேபோல் தாழ்ந்தவன், உயர்ந்தவன் என்று யாரும் இல்லை.

அதாவது, தாழ்ந்த உயிரி, உயர்ந்த உயிரி என்று எதுவுமில்லை. அதற்கு முக்கியக் காரணம் "அனைவருக்குள்ளும் அந்த ஸ்ரீஹரியே அந்தராத்மாவாக இருக்கிறார்" என்பதுதான் என்று அந்தப் பாடலின் பொருளைப் புரிந்து கொண்டேன்.

ஸ்ரீஹரி என்றால் வெங்கடேஸ்வர சுவாமிதானே? அவர் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் 'ஆன்மாவாக' இருக்கிறார் என்று எனக்குப் புரிந்தது.

அப்போதுதான் தெரிந்து கொண்டேன், இத்தனை காலம் அந்த வெங்கடேஸ்வர சுவாமி திருமலையில் இருக்கிறார் என்று நினைத்து அங்கே சென்று கொண்டிருந்தேன். ஆனால் உண்மையாக அந்த வெங்கடேஸ்வர சுவாமி, இந்த உடலுக்குள்ளேயே இருக்கிறார் என்பது எனக்குப் புரிந்தது.

அதனால்தான் பத்ரிஜி அவர்கள் விக்கிரக ஆராதனை வேண்டாம், சத்தியம் என்று சொல்லப்படும் ஆன்மாவையே ஆராதியுங்கள் என்று கூறினார். ஏனெனில் ஆன்மாவே உண்மை, ஆன்மாவே தெய்வம் என்பதால் தான்.

அதுவரை பூஜைகளைக் கைவிடுவதற்கு நான் பயந்தேன், ஏதேனும் தவறு செய்கிறேனா? என்று தோன்றியது. ஏனென்றால் சிறு வயதிலிருந்து, அதாவது 50 ஆண்டுகளாக அதுவே பழக்கமாகிவிட்டது. யாருக்காவது ஒரு விஷயம் பழகிவிட்டால், அந்தப் பழக்கத்தை மாற்றிக்கொள்வது மிகவும் கடினம்.

ஜென்ம ஜென்மங்களாக வந்த இந்த சம்ஸ்காரம் (பதிவு) ஒரேடியாக எப்படிப் போகும்? ஆனால், அத்தகைய பிரம்மர்ஷி பத்ரிஜி அவர்கள் சொன்னதைக் கேட்டு, அந்த பழக்கத்தை நான் மாற்றிக்கொண்டேன்.

அப்போது திருமலைக்குச் சென்றால் அங்கே இருப்பது விக்கிரகம் தான், ஆனால் உடலுக்குள் இருக்கும் உண்மையான வெங்கடேஸ்வர சுவாமியிடம் செல்வது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது.

திருப்பதிக்கு வருடத்திற்கு ஒருமுறை அல்லது இருமுறை செல்வேன். அப்படிச் சென்றாலும் ஒரு நிமிடம் கூட நிம்மதியாக அந்த பகவானைப் பார்க்க விடமாட்டார்கள்.

ஆனால், தியானம் செய்யும்போது சாட்சாத் உண்மையான ஆன்மாவுடன், அதாவது அந்த வெங்கடேஸ்வர சுவாமியோடு மணிக்கணக்கில் அமர்ந்திருப்பேன்.

அப்படித் தியானத்தில் அமரும்போது அளவில்லாத ஆனந்தம் கிடைத்தது, சக்தி அதிகரித்தது, என்னுள் எத்தனையோ மாற்றங்கள் வந்தன.

அதனால் தான், பத்ரிஜி அவர்கள் சொன்னதை நன்றாகப் புரிந்துகொண்டு உடனே நான் என் பழக்கத்தை மாற்றிக்கொண்டேன். இப்போது எனக்குள் இருப்பது 'மண் கட்டி சம்ஸ்காரம்' என்பது புரிகிறது. இதற்கு முன்பு நான் பயந்து கொண்டிருந்தேன், ஆனால் இப்போது அந்த பயம் இல்லை.

அதேபோல், நமது ரவி அசைவ உணவுகளை அதிகமாக உண்பவர். எனது அறிமுகத்திற்குப் பிறகு, அசைவம் உண்ணக்கூடாது, அது ரஜோ குணத்தை (வேகம்/ஆக்ரோஷம்) அதிகரிக்கும், நாம் செய்யக்கூடாத செயல்களைச் செய்யத் தூண்டும் என்று கூறப்பட்டது. அதுமட்டுமல்லாமல், ஒரு உயிரைக் கொல்வது இயற்கைக்கு விரோதமானது, அந்தப் பாவத்தை நாம்

அனுபவிக்க வேண்டியிருக்கும் என்று கூறியபோது அவர் அதைப் புரிந்து கொண்டார்.

தனக்குச் சில நோய்கள் இருப்பதையும், அசைவ உணவினால்தான் அந்த நோய்கள் வந்தன என்பதையும் உணர்ந்து, உடனடியாகத் தன்னை மாற்றிக்கொண்டார்.

அப்படிப் பல விஷயங்களில் மாற்றங்கள் வந்தன. மனைவியிடம் நடந்துகொள்ளும் முறை, அலுவலகத்தில் மற்ற ஊழியர்கள் மற்றும் உயர் அதிகாரிகளிடம் நடந்து கொள்ளும் முறையில் பல விஷயங்களில் மாற்றம் ஏற்பட்டது.

இதைக் கொண்டு ரவிக்கு இருப்பது 'மண் கட்டி சம்ஸ்காரம்' என்று சொல்லலாம். இந்த மண் கட்டி சம்ஸ்காரம் உள்ளவர்கள் வாழ்க்கையில் மிகச் சிறந்த நிலைக்கு முன்னேறுவார்கள்.

பெரியோர்கள் சொல்லும்போது அதன் பொருளைப் புரிந்து கொண்டு, அந்த மாற்றத்தைத் தங்களுக்குள் கொண்டுவர முடிந்தால், அந்த மண் கட்டி தண்ணீரில் கரைந்து போவது போல் அவர்களுக்குள் இருக்கும் தீய பழக்கவழக்கங்களும் மாறிவிடும்.

பலர் இந்த விஷயங்களைச் சொன்னவுடனேயே மாறிவிட்டார்கள். இந்த விக்கிரக வழிபாடு விஷயத்திலும், அசைவ உணவு விஷயத்திலும் பலர் மாறினார்கள். இதற்குக் காரணம், அவர்கள் அனைவரிடமும் மண் கட்டி சம்ஸ்காரங்கள் இருந்தது தான் காரணம்.

2) **மரக்கட்டை சம்ஸ்காரங்கள்** : பலர் விக்கிரக வழிபாட்டைக் கைவிட முடியாமல் இருப்பதற்கு ஆறு காரணங்கள் உள்ளன. அதில் முதலாவது "சம்ஸ்காரங்கள்", அதாவது சிறு வயதிலிருந்தே ஏற்பட்ட பழக்கம். அதனால், சட்டென்று அவற்றைக் கைவிட மாட்டார்கள். சொன்னால் சரிதான் என்பார்கள், ஒத்துக்கொள்வார்கள், ஆனால் மாற்றம் வராது.

ஒரு பெண்மணி விக்கிரக வழிபாடு குறித்துக் கேட்டபோது நான் சொன்னேன், முதலில் 'கடவுள் யார் என்று தெரிந்துகொள் , அவர் எங்கு இருக்கிறார் என்று தெரிந்துகொள், அவரை எப்படிச் சரணடைய வேண்டும் என்று தெரிந்துகொள், அதற்குப் பிறகு நீ என்ன செய்ய விரும்புகிறாயோ அதைச் செய்துகொள் என்று கூறினேன்.

அந்தப் பெண்ணைக் கேட்டால் ஆன்மா தான் கடவுள் என்று கூறுகிறார். ஆன்மா அனைவரின் உடலிலும் இருக்கிறது என்றும் கூறுகிறார். ஆனால், மீண்டும் கோயிலுக்குச் செல்கிறார். அதாவது அவருக்கு எல்லாம் தெரிந்திருந்தும், அந்த பழக்கத்தைக் கைவிட முடியாமல் இருக்கிறார்.

அதாவது இவருக்கு இருப்பது மரக்கட்டை சம்ஸ்காரம். காரணம், இவர் மெதுவாகத்தான் மாறுவார். அவர் இன்னும் பல வகுப்புகளைக் கவனிக்க வேண்டும். மண் கட்டி சம்ஸ்காரம் உள்ளவர்கள் நாம் சொல்லும் வகுப்புகளைக் கேட்டவுடன் தங்களுக்குள் மாற்றத்தைக் கொண்டு வருவார்கள். ஆனால் மரக்கட்டை சம்ஸ்காரம் உள்ளவர்கள், இந்த ஜூம் (Zoom) வகுப்புகள், பீமாவரம் வகுப்புகளைச் சில மாதங்கள் கேட்டால் தான் மெதுவாக மாறுவார்கள்.

இந்த ஜூம் வகுப்புகள், பீமாவரம் வகுப்புகளுக்கு வருபவர்கள் விஷயங்களைப் புரிந்துகொண்டு மெதுவாகத் தங்களை மாற்றிக் கொள்கிறார்கள். அவர்களுடையது மரக்கட்டை சம்ஸ்காரம் என்று சொல்லலாம். ஆனால் சொன்ன உடனே மாறியவர்களுடையதை மண் கட்டி சம்ஸ்காரம் என்று சொல்லலாம்.

யாராக இருந்தாலும் தியானம் செய்வதன் மூலம் புத்தி நன்றாக வளர்ச்சியடையும். அவர்கள் சொல்லப்படுவதைப்

புரிந்துகொண்டு, சத்தியத்தில் வாழ்வார்கள். அவர்களுக்கு அது தானாகவே நடைமுறைக்கு வந்துவிடும்.

அதனால்தான், இந்த சம்ஸ்காரங்கள் அவ்வளவு சீக்கிரம் போகாது. சம்ஸ்காரங்கள் நல்லவையாக இருந்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை. நமக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவதாக இருந்தால், நமது வளர்ச்சிக்குத் தடையாக இருந்தால், நமது துயரத்தை நீக்குவதற்கு இடையூறாக இருந்தால் அந்தப் பழக்கங்களை மாற்றிக்கொள்ளத்தான் வேண்டும். அதற்குப் புத்தியை நன்றாக வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்குத் தீவிர தியான சாதனை செய்ய வேண்டும்.

மனிதன் இறந்த பிறகு கூடவே வருபவை எவை என்பதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். ஏனெனில், மனிதன் வாழும்போது இந்தப் பூமியில் எவ்வளவோ சம்பாதிக்கிறான். செல்வம், சொத்துக்கள், நிலங்கள், பதவிகள், வேலைகள் மற்றும் தங்கம் எனப் பலவற்றைச் சேகரிக்கிறான். இப்படி இன்னும் எவ்வளவோ விஷயங்களை சம்பாதிக்கிறான்.

அதுமட்டுமின்றி மனைவி, கணவன், பிள்ளைகள், பேரக்குழந்தைகள், கொள்ளுப் பேரக்குழந்தைகள், நண்பர்கள், உறவினர்கள் எனப் பலரையும் தன் வாழ்க்கையில் சேர்த்துக் கொள்கிறான்.

ஆனால், மரணமடைந்து இந்தப் பூமியை விட்டுச் செல்லும்போது தன்னுடன் எவற்றையுமே எடுத்துச் செல்ல முடியாது. அனைத்தையும் இங்கேயே விட்டுவிட வேண்டும். ஆனால், உயிரோடு இருக்கும்போது மட்டும் அவை அனைத்தும் என்னுடையது என்றும், அங்கிருப்பவர்களை எனது ஆட்கள் என்றும் அல்லது எங்களுடையவர்கள் என்றும் கூறுகிறான்.

இவ்விதமாக என்னுடையது என்று சொன்ன பொருள்களோ, எனது ஆட்கள் என்று சொன்ன

மனிதர்களோ எவருமே அவனுடன் வரப்போவதில்லை. அப்படியிருந்தும் மனிதன் வாழ்க்கை முழுவதும் எதையாவது சம்பாதித்துக்கொண்டும், உறவுகளையும் வளர்த்துக்கொண்டே இருக்கிறான். ஆனால் எதுவுமே வராது, எவருமே வரமாட்டார்கள். அப்படியென்றால் எவை வரும்? என்றால், நாம் முன்னரே குறிப்பிட்ட அந்த 4 விஷயங்கள்மட்டுமே வரும்.

ஞானிகளின் வழிமுறை புத்திசாலியானவன் (ஞானி) தன்னுடன் வராத விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கமாட்டான். அத்தகையவர்களே யோகிகள். அவர்களிடமிருந்து நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். ரமண மகரிஷி, விவேகானந்தர் போன்றவர்களிடமிருந்து நாம் இதை கற்றுக் கொள்ளலாம். தங்களோடு வராத எதற்கும் அவர்கள் ஒருபோதும் முக்கியத்துவம் கொடுத்ததே இல்லை என்று அவர்களைப் பார்த்தால் நமக்கு புரியும்.

அவர்களின் முழு கவனமும் தன்னோடு கூட வருபவை எவை என்பதன் மீதே இருந்தது. எனவே, கூடவே வருபவற்றில் எவை நமக்கு நன்மையைத் தரும்? எவை நமக்குத் தீமையைத் தரும்? எவற்றின் மீது நாம் கவனம் செலுத்த வேண்டும்? என்பதை உணர்ந்தவனே பாக்கியசாலி.

இவை அனைத்தையும் தெரிந்துகொண்டு, எவை தனக்கு உண்மையான பலனைத் தருமோ அவற்றைச் சம்பாதிக்க வேண்டும்! அதை உணர்ந்தவன் மிகவும் அதிர்ஷ்டசாலி. அப்படியில்லாமல், எந்தச் சிந்தனையும் இன்றி, எப்படியெல்லாம் வாழ வேண்டுமோ அப்படியெல்லாம் வாழ்ந்தால் அந்த வாழ்க்கையில் நஷ்டமடைவது மட்டுமல்லாமல், அதற்குப் பிறகு பல கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள், எண்ணற்ற துயரங்களை அனுபவிப்பார்கள்.

எனவே, கூட வருபவை எவை என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். பலர் அப்படி என்ன இருக்கிறது என்று நினைக்கிறார்கள். ஆனால், அதில்தான் அனைத்தும் அடங்கியிருக்கிறது. ஏனென்றால், மரணத்துடன் வாழ்க்கை முடிந்து விடுவதில்லை.

பத்ரிஜி அவர்கள் தெளிவாகக் கூறியுள்ளார், மரணம் என்பது இருக்கும் இடத்தையும், இருக்கும் உடலையும் மாற்றுவது மட்டுமே தவிர, இல்லாமல் போவது அல்ல. எனவே மரணிப்பது உடல் மட்டுமே. அப்படியென்றால் நிலைத்திருப்பது எது? அதுவே ஆன்மா. ஆன்மா என்பது நாமே. அந்த ஆன்மா உடலுக்குள் பிரவேசித்தால் அதை பிறப்பு என்கிறோம். அந்த ஆன்மா உடலை விட்டு வெளியே வந்தால் அதை மரணம் என்கிறோம்.

எனவே ஆன்மாவாகிய நாம் பிறக்கும்போது ஒரு உடலை எடுத்துக் கொள்கிறோம். அந்தப் பிறவியில் அந்த உடலைக் கொண்டு எவ்வளவோ சம்பாதித்து, சேகரித்து, பலவற்றை அடைந்து, எத்தனையோ செயல்களைச் செய்துவிட்டு, மீண்டும் அந்த உடலை விட்டு விடுகிறோம்.

கவனித்துப் பார்த்தால், நாம் வரும்போது வெறும் கையுடன்தான் வருகிறோம். மரணமடையும் போதும் வெறும் கையுடன்தான் போகிறோம். அதாவது காலிக் கைகளுடன் போகிறோம். கைகளால் பிடித்துக்கொண்டு செல்வதற்கு எதுவுமே இல்லை. காரணம், உடல் இல்லாத போது கைகள் இருக்காது, பிறகு எப்படிப் பிடித்துக்கொண்டு செல்ல முடியும்?

ஆனால் கண்ணுக்குத் தெரியாதவற்றை எடுத்துச் செல்கிறார்கள். எனினும், மனிதர்கள் அனைவரும் கண்ணுக்குத் தெரிபவற்றின் மீதே கவனம் செலுத்துகிறார்கள். அவற்றிற்கே முக்கியத்துவம் கொடுத்து அவை தம்முடையவை என்று நினைக்கிறார்கள், அவை நிரந்தரம் என்று எண்ணுகிறார்கள்.

அவற்றைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார்கள், பெருமிதம் கொள்கிறார்கள், கர்வமும் அகங்காரமும் கூட கொள்கிறார்கள். ஆனால் அவையெல்லாம் நிலைக்காதவை, தன்னுடன் வராதவை என்ற உண்மை அவர்களுக்குத் தெரிவதில்லை.

அதுமட்டுமல்லாமல், அவ்வாறு தாங்கள் சம்பாதித்த எதையாவது இழந்துவிட்டாலோ அல்லது நஷ்டமடைந்தாலோ மிகவும் வருத்தப்படுகிறார்கள். இந்த கண்ணுக்குத் தெரியும் இவை எவையுமே கூட வருபவை அல்ல.

அவர்கள் எதையும் விட்டுச் செல்ல போவதில்லை என்று நினைக்க மாட்டார்கள். ஏதோ பெரிய இழப்பு ஏற்பட்டுவிட்டது என்று எண்ணி மிகவும் வருத்தப்படுகிறார்கள். தன்னுடன் வராத பொருட்கள் மற்றவர்களிடம் இருப்பதைப் பார்த்து பொறாமைப்படுவார்கள்; அவன் எவ்வளவு அதிர்ஷ்டசாலி, நான் எவ்வளவு துரதிர்ஷ்டசாலி என்று நினைத்துக் கொள்வார்கள்.

உண்மையில், அவை எதுவும் தன்னுடன் வராது என்பதை உணர்ந்து கொண்டால், அத்தகைய, செல்வம் உள்ள மனிதர்களைப் பார்த்து பரிதாபப்படுவார்கள். பாவம், தன்னுடன் வராதவற்றைப் பார்த்து இவன் மகிழ்ச்சியடைகிறானே என்று எண்ணுவார்கள். இதைத் தெரிந்துகொண்டால் அவர்கள் மீது பொறாமை வராது, மாறாக கருணையே பிறக்கும். தன்னிடம் இல்லையே என்று வருத்தப்பட மாட்டார்கள்; தன்னுடன் வராதவை எனக்கு ஏன்? என்று நினைப்பார்கள். இது ஞானம் உள்ளவர்களுக்கு மட்டுமே புரியும். அவர்களிடத்தில் எந்த அளவுக்கு ஞானம் உள்ளது என்பது இதிலிருந்தே புரியும்.

ஞானம் என்றால் என்ன? ஞானம் என்பது நான் இந்த உடல் அல்ல, நான் ஆன்மா என்று உணர்ந்து கொள்வதே உண்மையான ஞானம்.

இதை யார் உணர்கிறார்களோ, யாரிடம் இந்த ஞானம் இருக்கிறதோ, அவர்கள் இறந்து போகும்போது

இங்கேயே தங்கிவிடக்கூடிய அல்லது விட்டுச் செல்ல வேண்டிய பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள். எவை தன்னுடன் வருமோ, அவற்றிற்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

ரமண மகரிஷியின் வாழ்க்கையைப் பார்த்தால் இது நமக்குத் தெளிவாகப் புரியும். அவருக்குப் போகபாக்கியங்களின் மீது நாட்டம் இருந்ததில்லை. சொத்துக்கள், தங்கம் போன்ற எதன் மீதும் அவர் பார்வை விழுந்தது கூட இல்லை. அவர் ஒரு கோவணத்துடனேயே வாழ்ந்தார்; அந்த வேளைக்கு எந்த உணவு கிடைக்கிறதோ அதைத்தான் அவர் உண்பார்.

அவரைப் பார்ப்பதற்காக சீடர்களும் பக்தர்களும் ஏராளமாக வருவார்கள். ஒருமுறை ஒரு திருடன், இவ்வளவு பேர் வருகிறார்களே, அவருக்கு எத்தனை பரிசுகள் வரும்! அவரிடம் எவ்வளவு செல்வங்கள் இருக்கும்! என்று நினைத்தான். ஒருநாள் இரவு அவற்றை எல்லாம் கொள்ளையடிப்பதற்காக மெல்ல அவரது ஆசிரமத்திற்குள் நுழைந்து, அவர் இருக்கும் அறைக்குள் சென்றான். ரமண மகரிஷி அவனைப் பார்த்துவிட்டார். அவனைப் பார்த்து அவர் சொன்னார்: அப்பனே! என்னிடம் இருப்பவற்றைத் திருட வந்திருக்கிறாய் போலிருக்கிறது. நீ ஒரு காரியம் செய், நான் இங்கே இருந்தால், நீ எடுத்துச் செல்வதற்குப் பயப்படுவாய், தயங்குவாய், சங்கடப்படுவாய், நான் வெளியே செல்கிறேன், உனக்கு வேண்டிய அனைத்தையும் மூட்டையாகக் கட்டிக்கொண்டு போய்விடு. நீ சென்ற பிறகு நான் மீண்டும் வருவேன் என்று மகரிஷி கூறினார்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் இப்படிச் சொல்கிறார்? என்று உள்ளே சென்று பார்த்தபோது தான் அவனுக்குப் புரிந்தது–அவரிடம் திருடுவதற்கு எதுவுமே

இல்லை என்று. அப்போது அந்தத் திருடன் அவர் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டுவிட்டுச் சென்றான்.

இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், அவர் கூட வராத பொருட்களுக்கு ஒருபோதும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதுதான். நாம் உண்மையில் புத்திசாலிகளாக இருந்தால், மரணத்திற்குப் பின் நம்மோடு வராத விஷயங்களைப் பற்றி அதிகம் கவலைப்பட மாட்டோம்.

எனவே, இயற்கையாக நமக்கு எது கொடுக்கப்பட்டுள்ளதோ, எவ்வளவு இருக்கிறதோ, அது இயற்கையினால் நமக்கு அளிக்கப்பட்டது என்பதை உணருங்கள். கடந்த காலத்தில் நாம் செய்த செயல்களின் தகுதிக்கேற்பவே நமக்குக் கிடைத்துள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மனநிறைவு என்பது இருப்பதை வைத்துத் திருப்தியாக வாழ வேண்டும். அப்படி வாழ்பவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். முடிந்தவரை, நம்மிடம் எவ்வளவு குறைவாக இருந்தாலும், அதில் ஒரு சிறு பகுதியை உலக நன்மைக்காகச் செலவிட முடிந்தால், அதன் பலன் நம்மை வந்தடையும். நிலையற்றவை இந்த பூமியில் எவ்வளவு சேர்த்தாலும் அவை நம்மோடு வரப்போவதில்லை என்பது ஞானிகளுக்குப் புரியும்.

ஆகவே, மரணத்திற்குப் பின் நம்முடன் வருபவை வாசனைகள் (குணங்கள்), சமஸ்காரங்கள் (பண்புகள்), கர்மாக்கள் மற்றும் நாம் சம்பாதித்த ஞானம் மட்டுமே என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

செல்வம் உள்ளவன் பெரியவன் அல்ல, பதவியில் இருப்பவன் பெரியவன் அல்ல, பெரிய வேலைகளில் இருப்பவர்கள் சிறந்தவர்கள் அல்ல என்பதை புரிந்து கொள்ளுங்கள். காரணம், இவை எதுவுமே நிலையானவை அல்ல.

வேலை என்பது என்றாவது ஒருநாள் போகக்கூடியது அல்லது ஓய்வு பெற வேண்டியது. பதவியில் இருப்பவர்களைப் பார்க்கிறோம், யாரும் அந்தப் பதவியில் நிரந்தரமாக இருப்பதில்லை. அதேபோல், செல்வம் எப்போது வரும், எப்போது போகும் என்று யாருக்கும் தெரியாது.

நாம் பார்த்திருக்கிறோம் அல்லவா! அனில் அம்பானி ஒரு காலத்தில் மிகப் பெரியகோடீஸ்வரராக இருந்தார். சூழ்நிலைகளின் செல்வாக்கினால் அவர் தனது சொத்துக்கள் அனைத்தையும் இழக்க வேண்டியிருந்தது யாராக இருந்தாலும் இதுதான் நிலைமை. அதனால்தான், ஞானிகள் அழியக்கூடிய பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

ஆன்மாவாகிய நாம், ஆன்ம லாபத்திற்காகவே உழைக்க வேண்டும், ஆன்மாவின் உயர்விற்காகவே முயற்சிக்க வேண்டும். ஏனென்றால், இந்த உடல் சில காலம் மட்டுமே இருக்கும். உடலை விட்ட பிறகு ஆன்மாவாகிய நாம் சொந்த உலகமான அந்தப் பரலோகத்திற்குச் சென்றுவிடுவோம். அதுவே நமக்கு நிலையானது; நமக்கான உயர்வு அங்கேயே கிடைக்க வேண்டும்.

அதனால்தான் பெரியவர்கள், நீ பூமியில் இருக்கும்போதே ஆன்மாவாகவே வாழ், ஆன்மாவிற்கு நன்மை தரும் செயல்களையே செய் என்று கூறுகிறார்கள். அப்போதுதான் நீ சிறந்த மனிதனாக ஆவாய். அவ்வாறு உயர்ந்தவர்கள் தான் ரமண மகரிஷி, ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், யோகி வேமனா, வீரபிரம்மேந்திர சுவாமி, புத்தர், இயேசு போன்றவர்கள். மேலும் ராமன், ஆஞ்சநேய சுவாமி எனப் பலர் உள்ளனர். நமது பத்ரிஜி, ஷீரடி பாபா, மெஹர் பாபா, சத்ய சாய் பாபா போன்றவர்கள் மிகவும் உயர்ந்த

நிலையை அடைந்தார்கள். அவர்கள் தங்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் பல விஷயங்களை உலகிற்குப் போதித்தார்கள்.

இரண்டு விதமான வாழ்க்கை முறைகள் “நான் இந்த உடல்” என்று நினைத்து வாழ்பவர்களின் வாழ்க்கை முறை, அவர்கள் செய்யும் செயல்கள், அவர்களின் முன்னுரிமைகள் வேறாக இருக்கும். ஆனால், "நான் ஆன்மா" என்று உணர்ந்து வாழ்பவர்களின் வாழ்க்கை, அவர்களின் செயல்கள் மற்றும் அவர்களின் சிந்தனை முறை முற்றிலும் வேறு விதமாக இருக்கும்.

"நான் இந்த உடல்" என்று நினைப்பவர்களுக்கு, "நான் ஆன்மா" என்று வாழ்பவர்கள் சொல்வதும், செய்வதும் புரியாது. ஆன்மாவே தெய்வம் என்று உணராதவர்கள், "சிலை" தான் தெய்வம் என்று நினைக்கிறார்கள். அனைத்து உயிர்களும் ஒன்றுதான் என்று சொன்னால், "கோழி வேறு, நான் மனிதன்" என்று அவர்கள் கூறுவார்கள்.

அதுமட்டுமல்லாமல், அந்த உயிரினங்களைக் கொல்லக்கூடாது, அவற்றின் இறைச்சியை உண்ணக்கூடாது, அப்படிச் செய்தால் நீ முன்னேற மாட்டாய், வீழ்ச்சியடைவாய் என்று சொன்னால் அவர்களுக்குப் புரியாது.

ஆனால், ஞானம் உள்ளவர்கள் அத்தகைய மகான்களின் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடப்பார்கள். யார் இந்த ஜூம் (Zoom) வகுப்பிற்கு வந்தார்களோ, யார் பீமாவரம் மூன்று நாள் வகுப்பிற்கு வருகிறார்களோ, அவர்கள் அனைவரும் அந்த உயர்ந்த நிலையில் இருப்பவர்களே. கோடிக்கணக்கான மக்களில் இத்தகையவர்கள் ஒரு சிலரே.

இவர்களுடையது மண் கட்டி சம்ஸ்காரம் (மிருதுவான மனநிலை) போன்றது. பெரியவர்கள் சொன்ன உடனே இவர்கள் மாறிவிடுவார்கள். அதேபோல், இவர்கள்

இறைச்சி உண்பதைப் பற்றி (அதன் தீமைகளை) சொன்னவுடனேயே அதை விட்டு விடுவார்கள்.

ஆனால், மரக்கட்டை சம்ஸ்காரம் கொண்டவர்கள், எவ்வளவு சொன்னாலும் எங்கள் அப்பா சாப்பிட்டார், தாத்தா சாப்பிட்டார், எங்கள் குடும்பத்தில் அனைவரும் சாப்பிடுகிறார்கள் என்று பலவாறாகக் கேள்வி கேட்பார்கள். இன்னும் சொல்லப்போனால், இறைச்சி உண்பது பாவம் என்றால், நீங்கள் காய்கறிகளைச் சாப்பிடுகிறீர்களே? அவற்றிற்கும் உயிர் இருக்கிறதல்லவா? என்று பல கேள்விகளை எழுப்புவார்கள்.

அத்தகைய சந்தேகங்கள் ஒவ்வொன்றாகத் தீர்க்கப்பட்டால், என்றாவது ஒருநாள் அதைப் புரிந்துகொண்டு, மெதுவாகத் தங்களை மாற்றிக்கொள்வார்கள். அதனால்தான் பத்ரிஜி, ஞானிகளுடன் சகவாசத்தில் இருங்கள் என்று கூறினார்.

3) **கல் சம்ஸ்காரம்** (பண்ட சமஸ்காரம்):

இன்னும் சில வகை மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களுடையது பாறை/கல் மனநிலை. அவர்கள் எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டார்கள். அத்தகையவர்களைப் பார்த்து குருமார்களே, இவர்களுக்குச் சொன்னாலும் பலனில்லை என்று விட்டுவிடுவார்கள். யார் புரிந்து கொள்கிறார்களோ, அவர்களுக்கு மட்டுமே போதிக்க முயற்சிப்பார்கள்.

ஏனென்றால், ஒரு கல்லை எத்தனை ஆண்டுகள் தண்ணீரில் ஊறவைத்தாலும் அது மென்மையாவதில்லை. அத்தகைய குணம் கொண்டவர்கள் அவர்கள். அவர்கள் ஆரம்ப நிலையிலுள்ள பிறவிகளில் இருப்பவர்கள். அவர்களிடம் உள்ள இந்தப் பழக்கங்கள் மறைவதற்கு இன்னும் பல பிறவிகள் எடுக்கும்.

குறைந்தபட்சம் 'மரக்கட்டை சமஸ்காரம்' உள்ளவர்களாவது சில ஆண்டுகளில் மாறிவிடுவார்கள்.

எனவே, நம்மோடு வரப்போகும் அந்த ஆன்ம பயணத்தில் நாம் எத்தகைய பழக்கங்களை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்?

எத்தகைய பழக்கங்கள் நமக்கு நன்மையைத் தரும்? நமது எதிர்காலத்தை எவை வடிவமைக்கும்? ஆன்மாவின் உயர்வுக்கு உதவும் பழக்கவழக்கங்கள் எவை?

என்பதை உணர்ந்து, அத்தகைய நற்பண்புகளை வளர்த்துக்கொள்பவனே புத்திசாலி.

எனவே, அந்த குருமார்கள் சொன்னதைப் புரிந்து கொண்டு, நம்மோடு கூட வருபவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இது இப்போது தெரியாது, எதிர்காலத்தில் தான் புரியும்.

நம்மோடு கூட வருபவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தால், அடுத்த பிறவி எவ்வளவு சிறப்பாக இருக்கும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்டவர்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்! அவர்கள் எந்த உலகங்களுக்குச் சென்றாலும் அங்கே பெரும் வரவேற்பும், ஆதரவும், உயர்ந்தவர்களின் சகவாசமும் கிடைக்கும். எனவே, நம்மோடு வரப்போகும் விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்போம்.

மனிதன் இறந்த பிறகு... தன்னோடு கூட வருபவை எவை என்பது குறித்து எவ்வளவு விழிப்புணர்வுடன் இருக்கிறானோ, அவ்வளவு சிறப்பாக அவனது எதிர்காலப் பிறவி அமையும்.

பலர் இறந்தால் வாழ்க்கை முடிந்துவிட்டது என்று நினைக்கிறார்கள், அது தவறு. ஏனென்றால், நீங்கள் உடல் என்றால் அத்துடன் வாழ்க்கை முடிந்துவிடும். ஆனால் அனைவரும் ஆன்மாக்கள். எனவே, நிச்சயமாக எதிர்காலம் இருக்கிறது. அந்த எதிர்காலம் மூன்று வகைப்படும்:

எதிர்காலத்தின் மூன்று நிலைகள்:
1.இந்த ஜன்மத்தில் இருக்கும் எதிர்காலம்.
2.இறந்த பிறகு மேலுலகில் (பரலோகம்) இருக்கக்கூடிய வாழ்க்கை - இது மற்றொரு எதிர்காலம்.
3.மீண்டும் வேறொரு உடல் எடுத்து, அடுத்த பிறவியில் பிரவேசிக்கும் போது அமையும் எதிர்காலம்.

இந்த அனைத்து வகையான எதிர்காலமும் சிறப்பாக இருக்க வேண்டுமென்றால், மனிதனுக்கு இறந்த பிறகு தன்னோடு கூட வருபவை எவை என்பது பற்றி தெளிவான புரிதல் அவசியம் இருக்க வேண்டும்.

எனவே, தற்போது இருக்கும் தற்காலிகமான பொருட்கள் மீது கவனம் செலுத்தாமல், நம்மோடு தொடர்ந்து வருபற்றின் மீது கவனம் செலுத்த வேண்டும். இந்த விஷயம் உங்களுக்கு எவ்வளவு நன்றாகப் புரிகிறதோ, அவ்வளவு சிறப்பாக நீங்கள் அதைச் செயல்படுத்துவீர்கள்.

அதனால்தான் தெரிந்து கொள்வது மட்டும் முக்கியமல்ல, புரிந்து கொள்வது மிக முக்கியம். சும்மா தெரிந்து கொள்வதால் எந்தப் பயனும் இல்லை, புரிந்து கொண்டால் மட்டுமே பலன் கிடைக்கும். ஏனென்றால், எவன் ஒருவன் உண்மையை உணர்கிறானோ, அவனே அதைச் செயல்படுத்தவும் செய்வான். அப்படிப்பட்டவர்களுக்கு எதிர்காலத்தில் ஒரு அற்புதமான பிறவி அமையும்.

பலர் தற்போது தங்களுக்கு இருக்கும் ஒருசில குறைகளை நினைத்து வருத்தப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். எனக்கு இப்படிப்பட்ட பிறவி அமைந்துவிட்டதே! என் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே! என்று கடவுளை நிந்திக்கிறார்கள். அவர்கள் மேலும் என்ன சொல்கிறார்கள் என்றால், ஏன் கடவுள் எனக்கு இவ்வளவு கஷ்டங்களையும், இவ்வளவு பிரச்சனைகளையும், இப்படிப்பட்ட குடும்பத்தையும், இத்தகைய சூழ்நிலையைக் கொடுத்தார்? என்று

வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை. நம்முடன் கூட வரும் விஷயங்கள் (புண்ணியங்கள்/பண்புகள்) மீது உங்களுக்கு விழிப்புணர்வு இருந்தால், எந்தத் துன்பங்களும், பிரச்சனைகளும் இல்லாத ஒரு எதிர்கால வாழ்க்கை உங்களுக்குக் கிடைக்கும்.

எனவே, எதைச் சாதிக்க வேண்டுமானாலும்... எதைச் சரிசெய்ய வேண்டுமானாலும்... இப்போது இருக்கும் இந்த வாழ்க்கையிலேயே சரிசெய்துகொள்ள வேண்டும். இந்தப் பிறவியில் எதுவுமே செய்யாமல், அதன் பிறகு (மரணத்திற்குப் பின்) உங்களால் என்ன செய்ய முடியும்? எதை மாற்றிக் கொள்ள முடியும்?

நாம் இந்த ஆன்மீகப் பாதைக்கு வந்திருக்கிறோம் என்றால், நாம் ஞான மார்க்கத்திற்கு வந்திருக்கிறோம் என்று அர்த்தம். எனவே, எல்லாவற்றைப் பற்றியும் தெளிவான புரிதல் இருக்க வேண்டும். யார்ரெல்லாம் புத்தி நிலையிலும், ஆன்ம நிலையிலும் இருக்கிறார்களோ, அவர்களால் மட்டுமே இவற்றைப் புரிந்துகொள்ள முடியும். எனவே, இறந்த பிறகும் கூடவே வரும் கர்மாக்கள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்வோம்.

# கர்மவினைகள்

கர்மவினைகள் என்றால் என்ன? அவை எத்தனை வகைப்படும்? எந்த வகையான செயல்களுக்கு (கர்மாக்களுக்கு) நாம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்? நாம் எத்தகைய செயல்களைச் செய்ய வேண்டும்? என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

முக்கியமாக கர்மவினைகள் மூன்று வகைப்படும். அவை:

1.வர்த்தமான கர்மாக்கள் (நிகழ்காலச் செயல்கள்)

2. சஞ்சித கர்மாக்கள் (சேமிக்கப்பட்ட வினைகள்)

3.பிராரப்த கர்மாக்கள் (அனுபவிக்க வேண்டிய வினைகள்)

வர்த்தமான கர்மாக்கள் என்றால், தற்போது நாம் செய்துகொண்டிருக்கும் செயல்கள் ஆகும். இதையே 'ஆகாமிய கர்மாக்கள்' என்றும் கூறுவர்.

நாம் காலையில் எழுந்தது முதல், இரவு உறங்கும் வரை எத்தனையோ வேலைகளைச் செய்கிறோம். செயல்கள் மட்டுமல்ல, நாம் பேசும் வார்த்தைகளும், செய்யும் காரியங்களும் கூட கர்ம வினைகளின் கீழேயே வருகின்றன.

இந்த ஜென்மத்தில் செய்த வினைகளில் 60 சதவீதம் இந்த ஜென்மத்திலேயே அனுபவித்து விடுகிறோம். அனுபவித்து போக மீதமிருக்கும் கர்மாக்கள், உடல் மறைந்த பிறகு, ஒவ்வொருவரின் கணக்கிலும் சேரும். அவற்றையே 'சஞ்சித கர்மாக்கள்' என்கிறோம்.

சாஸ்திரங்களில் இதனை "சித்ரகுப்தனின் கணக்கு" என்று கூறுவார்கள். நமது சமூகத்தில் இதனை நாம் "ஆகாஷிக் ரெக்கார்ட்ஸ்" (Akashic Records) என்று குறிப்பிடுகிறோம். மீண்டும் ஒரு புதிய பிறவி எடுக்கும்போது, இந்த 'சஞ்சித' கணக்கிலிருந்து சில

கர்மாக்களை தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம். அவ்வாறு நாம் எவற்றைத் தேர்ந்தெடுத்து வருகிறோமோ, அந்த கர்மவினைகளே 'பிராரப்த கர்மாக்கள்' எனப்படும்.

அவ்வாறு கொண்டு வந்த 'பிராரப்த கர்மங்களை' நிச்சயமாக அனுபவித்தே தீர வேண்டும். எவராக இருந்தாலும் இதிலிருந்து தப்ப முடியாது. இவ்விதமாக மூன்று வகை கர்மவினைகள் உள்ளன. இந்த கர்மங்களைப் பொறுத்தே உங்கள் எதிர்காலம் அமையும். இந்த கர்மாக்களைப் பற்றி உங்களுக்கு எவ்வளவு புரிதல் இருக்கிறதோ, அவ்வளவு நன்மைகளை நீங்கள் எதிர்காலத்தில் பெறுவீர்கள்.

1.பாப கர்மாக்கள்(தீய செயல்கள்) 2.புண்ணிய கர்மாக்கள் (நல்ல செயல்கள்) 3.முக்தி கர்மாக்கள் (விடுதலைக்கான செயல்கள்). இவற்றையே ஆன்ம கர்மாக்கள் என்றும் அழைப்பார்கள்.

கவனித்துப் பார்த்தால், சிலர் பாப கர்மாக்களைச் செய்கிறார்கள். சிலர் புண்ணிய கர்மங்களைச் செய்கிறார்கள். மிகச் சிலரே முக்தி கர்மாக்களை அதாவது ஆன்ம கர்மாக்களைச் செய்கிறார்கள்.

ஒருவிதத்தில் சொல்லப்போனால், எவரெல்லாம் இப்போது ஜூம் (Zoom) வகுப்பிற்கு வருகிறார்களோ! பீமவரம் வகுப்புகளுக்கு வருகிறார்களோ! அவர்களுக்கு இந்தக் கர்மாக்கள் மீதும், 'கர்ம சித்தாந்தம்' மீதும் புரிதல் இருக்கும்.

அவர்கள் இந்தப் பாப கர்மங்கள், புண்ணிய கர்மாக்களை விட முக்தி கர்மாக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பார்கள், முக்தி கர்மாக்களையே செய்வார்கள். ஏனென்றால், இந்த ஞான மார்க்கத்திற்கு வந்தவர்களுக்கு ஒரு புரிதல் இருக்கும். அது என்னவென்றால்:

பாப கர்மாக்கள் செய்தால் துயரம் உண்டாகும்.

புண்ணிய கர்மாக்கள் செய்தால் போகங்கள் (இன்பங்கள்) கிடைக்கும். ஆனால்,

முக்தி கர்மாக்கள் செய்தால் மோட்சம் கிடைக்கும்.

இந்த விழிப்புணர்வு ஞான மார்க்கத்திற்கு வந்தவர்களுக்கு இருக்கும். ஆனால், புதிதாகத் தியானத்திற்கு வந்தவர்களுக்குச் சரியான புரிதல் இருக்காது.

கவனித்தால், புண்ணிய கர்மாக்களால் பெரிய நஷ்டம் ஏதுமில்லை. ஆனால், பாப கர்மங்களால் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும், நரகத்தை அனுபவிக்க வேண்டும். இந்தப் பாப கர்மாக்களைக் கடக்க வேண்டும் என்றால் 'முக்தி கர்மங்களைச்' செய்ய வேண்டும். அதாவது 'ஞானத்தை' வளர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு, "மூச்சின் மீது கவனம்" வைத்துத் தியானம் செய்ய வேண்டும். பத்ரிஜி அவர்கள் போதித்த "மூச்சின் மீது கவனம்" வைக்கும் முறையைத் தவிர வேறு எந்தத் தியானத்தைச்செய்தாலும் ஞானம் கிடைக்காது.

பகவத் கீதையில் சொல்லப்பட்டுள்ளது அல்லவா! **'ஞானாக்னி தக்த கர்மாணம்'** என்று, அதாவது ஞானம் என்னும் நெருப்பிலேயே இதற்கு முன் செய்த கர்மாக்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகிவிடும். சரி, கர்மாக்களை ஏன் எரிக்க வேண்டும்? என்றால், கர்மாக்கள் அனைத்தும் எரிந்து போனால் மட்டுமே ஒருவனுக்கு
விரும்பும் அந்த மோட்சம் என்பது கிடைக்கும். இதையே துன்பமற்ற நிலை என்றும், நிலையான ஆனந்த நிலை என்றும் கூட அழைப்பார்கள்.

அதனால்தான் அத்தகைய ஞானம் சுவாசத்தின் மீது கவனம் வைக்கும் தியானத்தின் மூலமே சாத்தியமாகும்.

இந்த பாப கர்மாக்கள், புண்ணிய கர்மாக்கள் ஆகிய இரண்டும் உடலுக்குச் சம்பந்தப்பட்டவை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால், 'முக்தி கர்மாக்கள்'

ஆன்மாவுக்குச் சம்பந்தப்பட்டவை. எனவே, இவற்றைப் பற்றி இன்னும் ஆழமாகப் படிப்போம்.

முன்பே சொன்னது போல், கர்மாக்கள் மூன்று விதங்களாகச் செய்பவர்கள் இருக்கிறார்கள். சிலர் 'பாப கர்மாக்கள்' செய்கிறார்கள், சிலர் 'புண்ணிய கர்மாக்கள்' செய்கிறார்கள். மிகக் குறைந்த அளவிலான மக்களே 'முக்தி கர்மாக்கள்' அல்லது 'ஆன்ம கர்மாக்களை' செய்கிறார்கள்.

இன்னும் ஆழமாகச் சிந்தித்தால், நாம் செய்யும் அனைத்துக் கர்மாக்களையும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்:

1.தேக கர்மாக்கள்(உடல் சார்ந்த செயல்கள்)

2. ஆன்ம கர்மாக்கள் (ஆன்மா சார்ந்த செயல்கள்)

உடல் நலன்களுக்காச் செய்யப்படுபவை 'தேக கர்மாக்கள்' எனப்படும். 'ஆன்ம லாபத்திற்காக' செய்யப்படுபவை 'ஆன்ம கர்மாக்கள்'.

அதேபோல், இந்த தேக கர்மாக்களிலும் இரண்டு வகைகள் உள்ளன:

(1) பாப கர்மாக்கள், (2) புண்ணிய கர்மாக்கள்

அதேபோல், ஆன்ம கர்மாக்களிலும் இரண்டு வகைகள் உள்ளன:

(1) பாப கர்மாக்கள், (2) புண்ணிய கர்மாக்கள்

**1) தேக கர்மங்களில் பாப கர்மாக்கள்: -**

மற்றவர்களுக்கோ அல்லது இதர உயிரினங்களின் உடல்களுக்கோ நஷ்டத்தை ஏற்படுத்துவது , கஷ்டத்தை கொடுப்பது, வலியைத் தருபவை மற்றும் வன்முறையைத் தூண்டுவது போன்ற செயல்கள் இதில் அடங்கும்.

பத்ரிஜி அவர்கள் தேக பாப கர்மாக்களைப் பற்றி மிகவும் அழுத்தமாகச் சொல்வார். அவர் உயிரினங்களுக்குத் துன்பம் விளைவிப்பதையோ அல்லது

மாமிசம் உண்பதையோ செய்யக்கூடாது என்று அவர் கூறுவார். ஏனென்றால், உடல் ரீதியான பாப கர்மாக்களைச் செய்பவர்கள், எதிர்காலத்தில் தங்கள் உடலால் அந்தப் பாவத்தின் பலனை அனுபவிக்க வேண்டியிருக்கும். தற்போது நோய்களால் அவதிப்படுபவர்கள் அனைவரும், முன்காலத்தில் பிற உயிரினங்களுக்கோ அல்லது பிற பிராணிகளுக்கோ துன்பம் விளைவித்தவர்களே! அதனால்தான் பத்ரிஜி அவர்கள் எந்த ஒரு உயிரையும் துன்புறுத்தக்கூடாது என்று கூறுவார்.

அதேபோல், ஒருவரை ஏமாற்றினாலும், கஷ்டப்படுத்தினாலும் அல்லது நஷ்டப்படுத்தினாலும், அதே பலனை மீண்டும் அனுபவிக்க வேண்டியிருக்கும். உதாரணமாக, ஒரு உயிரினத்தின் கால்களை வெட்டினால், விபத்திலோ அல்லது நோயின் காரணமாகவோ தனது கை, கால்களை இழக்க நேரிடும். அவ்வாறு எந்த வகையான வன்முறையைச் செய்தாலும், அதே போன்ற துன்பத்தை அனுபவிக்க வேண்டியிருக்கும்.

மற்றொரு விஷயம் என்னவென்றால், இந்த உயிரினங்கள் - அதாவது விலங்குகள், பறவைகள், பூச்சிகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் அனைத்தும் 'கூட்டு ஆன்மாக்கள்' (Group Souls). ஆனால் மனிதன் 'தனி ஆன்மா' (Individual Soul). எனவே, அந்த உயிரினங்களுக்கு இழைக்கும் வன்முறையை விட, சக மனிதர்களுக்கு இழைக்கும் வன்முறை மிகவும் தீவிரமான விளைவுகளைக் கொண்டிருக்கும்.

விலங்குகள் 'கூட்டு ஆன்மாக்கள்' என்பதால், அவற்றிற்குச் செய்த தீமையின் பலனை அனுபவிக்கச் சிறிது காலம் எடுக்கும். ஆனால் சக மனிதர்கள் விஷயத்தில் அப்படி இருக்காது. ஏனென்றால் மனிதன் ஒரு 'தனி ஆன்மா'. பலர் பெண்கள் மீது அராஜகம்

இழைக்கிறார்கள், அதே போல் பலர் மனைவிகளைக் கொடுமைப்படுத்துகிறார்கள். அதுமட்டுமின்றி, தன்னிடம் வேலை செய்பவர்களைத் துன்புறுத்துவது, அப்பாவி மக்கள் மற்றும் தங்களுக்கு கீழ் பணிபுரியும் ஊழியர்களையும், எளியவர்களையும் குறைவாக மதித்து அவர்களைத் துன்புறுத்துவது போன்றவற்றைச் செய்கிறார்கள். அதனால், இவற்றின் பாதிப்பு மிகவும் தீவிரமாக இருக்கும்.

எனவே, விலங்குகளிடம் மட்டுமல்ல, சக மனிதர்கள் விஷயத்திலும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இல்லையெனில் மிகுந்த வேதனையை அனுபவிக்க நேரிடும

2) **தேக கர்மங்களில் புண்ணிய கர்மாக்கள்**: -

அதாவது மற்றவர்களுக்கோ அல்லது பிற உயிரினங்களுக்கோ நன்மையையும், ஆனந்தத்தையும் தரும் செயல்கள் புண்ணிய கர்மாக்கள் ஆகும். மற்றவர்களுக்குச் சேவை செய்தால் அதன் பலனாக போகம் அதாவது இன்பத்தின் வடிவத்தில் அனுபவிப்பார்கள்.

சேவை செய்வது என்பது மற்றவர்களுக்கு நன்மை பயக்கும் அன்னதானம், வஸ்திர தானம் (உடை), பண உதவி மற்றும் மருத்துவ சேவைகள் போன்றவற்றைச் செய்வதாகும்.

இந்த புண்ணிய கர்மாக்களைச் செய்வதன் மூலம் மனிதன் போகத்தை (இன்பத்தை) அனுபவிக்கிறான். அதாவது, மற்றவர்களின் உடலுக்கு நன்மை செய்ததால், அவனது உடலும் நன்மையைப் பெறும். அதனால்தான் அறிஞர்களும் பெரியோர்களும் பாவம் செய்யாதே, புண்ணியம் செய் என்று கூறுகிறார்கள்.

அதேபோல், ஆத்ம கர்மாக்களிலும் அதாவது முக்தி கர்மாக்களிலும் கூட இரண்டு வகைகள் உள்ளன.

இதிலும் பாப கர்மாக்கள் உள்ளன, புண்ணிய கர்மாக்கள் உள்ளன.

எனவே முதலில் தேக கர்மாக்களுக்கும் (உடல் சார்ந்த செயல்கள்), ஆத்ம கர்மாக்களுக்கும் (ஆன்மா சார்ந்த செயல்கள்) இடையே உள்ள வித்தியாசத்தைத் தெரிந்துகொண்டால், பிறகு இந்த ஆன்மீக பாப கர்மாக்ககள் மற்றும் ஆன்மீக புண்ணிய கர்மாக்கள் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

தேக பாப கர்மாக்கள் கஷ்டத்தைத் தந்தால் - அதாவது துன்பத்தைத் தந்தால், தேக புண்ணிய கர்மாக்கள் போகத்தைத் தரும்.

அதேபோல், இந்த முக்தி கர்மாக்களிலும் பாப கர்மாக்களைச் செய்தால் ஆன்மா வீழ்ச்சியடையும். இந்த முக்தி கர்மாக்களில் புண்ணிய கர்மாக்களைச் செய்தால் அவனுக்கு மோட்சம் கிடைக்கும்.

உடல் சம்பந்தப்பட்ட செயல்கள் அனைத்தும் தேக கர்மாக்கள் எனப்படும். ஆன்மா சம்பந்தப்பட்ட செயல்கள் அனைத்தும் முக்தி கர்மாக்கள் எனப்படும்.

1) **முக்தி கர்மாக்களில் பாப கர்மாக்கள்: -**

பலர் தியான மார்க்கத்திற்கு வந்தும் கூட, பல வகைகளில் பலரை ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கிறார்கள். அவ்வாறு அவர்களின் அறியாமையையும், பலவீனங்களையும் இவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இது முக்தி சம்பந்தப்பட்ட பாப கர்மா - அதாவது ஆன்மா சம்பந்தப்பட்ட பாப கர்மா ஆகும்.

இன்னும் சிலர் விதவிதமான மாய வார்த்தைகளைச் சொல்லி மற்றவர்களை வசப்படுத்தி, அவர்களைப் பல துன்பங்களுக்கு உள்ளாக்குகிறார்கள். இதுவும் ஆன்ம சம்பந்தமான பாவக் கர்மா.

இன்னும் சிலர் பிரமிடுகளின் பெயரைக் கூறி அதிகப் பணம் வசூலித்து, அதன் மூலம் தங்களுக்குச் சொந்தமான வேலைகளைச் செய்வது, தங்கள் குடும்பத்தைப் பராமரிப்பது மற்றும் சிலர் வீடு கட்டுவது போன்றவற்றைச் செய்கிறார்கள்.

இவ்வாறு இந்த மார்க்கத்தில் (ஆன்மீகத்தில்) பல வழிகளில் பணம் சம்பாதிக்க நினைப்பவர்கள் ஒவ்வொருவரும் ஆன்ம பாவக் கர்மாக்களைச் செய்கிறார்கள் என்று தான் அர்த்தம். அதன் விளைவாக எதிர்காலத்தில் அவர்களின் ஆன்மா வீழ்ச்சியடையும். அதனால்தான், பத்ரிஜி அவர்கள் தியான மார்க்கத்தில் பணப் பரிவர்த்தனைகள் இருக்கக்கூடாது என்று 18 லட்சியக் கொள்கைகளில் (Adarsha Sutras) கூறியுள்ளார்.

நினைவில் கொள்ளுங்கள், "சுவாசத்தின் மீது கவனம்" (Ana-pana-sati) என்பது மட்டுமே ஆன்மா சம்பந்தப்பட்ட பயிற்சி. ஆனால், பலர் 'கைடிங்' (Guiding) என்ற பெயரில் "வார்த்தையின் மீது கவனம்" என்றும், இன்னும் பலவிதமான தியான முறைகளையும் சொல்கிறார்கள். அவை ஆன்ம கர்மாவின் கீழ் வராது. அவை மனதுடன் தொடர்புடையவை. எனவே கைடிங் செய்பவர்களின் ஆன்மாவிற்கு எந்த நன்மையும் கிடைக்காது, ஆன்ம உயர்வும் அடையாது.

ஏனென்றால் உலகில் தேக(உடல்) சாதனைகள் உள்ளன, மனோ சாதனைகள் (மனம்) உள்ளன. கைடிங் என்பது மனதிற்குச் சம்பந்தப்பட்ட ஒரு பயிற்சியே ஆகும்.

**2) முக்தி கர்மங்களில் புண்ணிய கர்மாக்கள்: -**

ஒருவகையில் சொல்லப்போனால் சுவாசத்தின் மீது கவனம் வைத்துச் செய்யும் தியானம் மட்டுமே ஆன்ம சம்பந்தப்பட்ட கர்மா என்று நினைவில் கொள்ள வேண்டும். மற்ற சாதனைகள் அனைத்தும் மனதிற்குச் தொடர்புடையவை அல்லது உடலுடன் தொடர்புடையவை.

சுவாசத்தின் மீது கவனம் தியானம் ஒன்றுதான் ஆன்ம சம்பந்தப்பட்ட புண்ணிய கர்மா. எனவே இந்த தியான மார்க்கத்தில் செய்யப்படும் அனைத்தும் ஆன்மாவிற்கான புண்ணிய கர்மாக்களே.

முதலில் தேக புண்ணிய கர்மாக்களுக்கும், ஆன்ம புண்ணிய கர்மாக்களுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்துகொள்வோம். ஷீரடி சாய்பாபா கோவிலில் அன்னதானம் செய்தால், அது தேக சம்பந்தப்பட்ட புண்ணிய கர்மா. இப்போது கட்தால் (Kadthal) யாகங்களில் செய்யப்படும் அன்னதானத்திற்கும், பீமவரம் மூன்று நாட்கள் வகுப்புகளில் நடக்கும் அன்னதானத்திற்குச் செய்வது ஆன்ம சம்பந்தமான புண்ணிய கர்மாவின் கீழ் வரும்.

அதேபோல், பள்ளிகளில் பாடப்புத்தகங்களை விநியோகம் செய்தால் அது தேக புண்ணிய கர்மா. ஆனால், தியானம் சம்பந்தப்பட்ட புத்தகங்கள், ஞானம் சம்பந்தப்பட்ட புத்தகங்களை மற்றவர்களுக்கு விநியோகித்தால் அது ஆன்ம புண்ணிய கர்மாவின் கீழ் வரும்.

பீமவரத்தில் நடக்கும் முகாமிற்கு ஏராளமானோர் வருகிறார்கள். அவர்கள் அங்கு சொல்வதைக் குறித்துக் கொள்கிறார்கள், அந்த ஞானம் அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களுக்கு அடுத்த தலைமுறையினருக்கும் கூட மிகவும் பயனுள்ளதாக இருக்கும், நன்மையளிக்கும். அத்தகைய புத்தகங்களை உங்களால் இலவசமாக வழங்க முடிந்தால், அதுவும் ஆன்ம புண்ணிய கர்மா என்றே கணக்கிடப்படும்.

அதுமட்டுமல்லாமல், பலர் மற்ற உயிரினங்களைக் கொல்கிறார்கள். அந்த உயிரினங்களைக் கொன்று வன்முறைக்குக் காரணமாகிறார்கள். அவ்வாறான

வன்முறை நடக்காமல் இருக்க, அவர்களுக்கு அந்த ஞானத்தை உண்டாக்க, அஹிம்சை சம்பந்தப்பட்ட புத்தகங்களை விநியோகித்தால் அது ஆன்ம புண்ணிய கர்மாவின் கீழ் வரும். காரணம், அந்த உயிரினத்தின் ஆன்மா இதனால் உன்னத நிலையை அடைகிறது. அவ்வாறு ஒரு உயிரினத்தின் ஆன்மாவிற்கு நன்மை விளைவிக்கும்போது, அவர்களின் ஆன்மாவும் நன்மையைப் பெறுகிறது.

அதேபோல் மற்றவர்களுக்கு நன்மை பயக்கும் ஞானத்தை நாம் அனைவருக்கும் பகிர்ந்து வந்தால், அது எல்லாவற்றையும் விட மிகச் சிறந்த ஆன்ம புண்ணிய கர்மா ஆகும். இவையெல்லாம் ஆன்மா சம்பந்தப்பட்ட புண்ணிய கர்மாக்கள்.

யாராக இருந்தாலும் அவர்கள் ஆன்மா என்பதால், ஆன்மாவிற்கு நன்மை கிடைக்க வேண்டும். அதற்கு ஆன்ம சாதனையான சுவாசத்தின் மீது கவனம் (ஆனாபானசதி) தியானம் செய்ய வேண்டும். அதனுடன் சேர்த்து மற்றவர்களின் ஆன்மாவிற்கு நன்மை பயக்கும் சேவைகளைச் செய்ய வேண்டும். அதனால்தான் நாம் அனைவரும் இந்தத் தியான மார்க்கத்திற்கு வந்தோம், அதாவது முக்தி கர்மாக்களுக்குள் வந்தோம். எனவே இந்த முக்தி கர்மாக்களில், அதாவது ஆன்ம கர்மங்களில் நாம் செய்யும் செயல்களால் மற்றவர்களுக்கு எந்த விதமான நஷ்டமும் ஏற்படக்கூடாது. முக்கியமாக 'தியானம்' என்ற பெயரில் எந்த வகையான மோசடி செய்தாலும், மாய வார்த்தைகளைச் சொன்னாலும், தவறான வழியில் நடத்தினாலும், அவர்கள் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தாலும், தனது சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டாலும் அவர்கள் ஆன்மீக ரீதியாக வீழ்ச்சியடைவார்கள்.

பெரியவர்கள் எதற்கும் பாவம் விளைய வேண்டும் என்று சொல்வார்கள். ஒருவேளை இவ்வளவு செய்தும் அவனுக்கு ஒன்றும் நடக்கவில்லை என்றால், இன்னும் அவனது பாவக் கணக்கு நிறையவில்லை என்று அர்த்தம். ஆனால் அவ்வாறு நடந்து கொண்டவர்கள் எத்தனையோ பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், காணாமல் போயிருக்கிறார்கள். அவர்கள் ஏதோ சில காலம் பிரகாசிப்பார்கள், பிறகு கண்ணுக்குத் தெரிய மாட்டார்கள். எனவே இவை அனைத்தையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அதேபோல், இந்த தேக கர்மாக்களிலும் சரி, ஆன்ம கர்மாக்களிலும் சரி இரண்டு வகைகள் உள்ளன. அவை: 1) காம்ய கர்மாக்கள், 2) நிஷ்காம கர்மங்கள்

காம்ய கர்மாக்கள் என்றால் பலனை எதிர்பார்த்துச் செய்யும் செயல்கள், நிஷ்காம கர்மங்கள் என்றால் பலனை எதிர்பார்க்காமல் செய்யும் செயல்கள்.

**1) தேக காம்ய கர்மா:-**

பாருங்கள், உடல் ரீதியான லாபத்திற்காக, அதாவது ஒரு விருப்பம் நிறைவேற வேண்டும் என்று பூஜை செய்தால் அது காம்ய கர்மா. அதேபோல் யக்ஞங்கள், யாகங்கள் கூட காம்ய கர்மங்கள் எனப்படும்.

மழை பெய்ய வேண்டும் என்றோ, புத்திர பாக்கியம் கிடைக்க வேண்டும் என்றோ, ராஜ்யத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்றோ அல்லது ஏதோ ஒரு லாபம் கிடைக்க வேண்டும் என்றோ பெரிய பெரிய அரசர்கள் செய்த யாகங்கள் 'காம்ய கர்மங்கள்'.

**2) தேக நிஷ்காம்ய கர்மா:-**

அதேபோல் உடல் ரீதியான நலத்திற்காக எதையும் எதிர்பார்க்காமல் செய்யும் செயல் நிஷ்காம்ய கர்மா எனப்படும். நீ உடல் நலத்திற்காக எதை வேண்டுமானாலும் செய், ஆனால் செய்த செயலின் பலனை எதிர்பார்க்கக்கூடாது. அவ்வாறு செய்யும் செயல்கள் அனைத்தும் தேக நிஷ்காம

கர்மா எனப்படும். பகவத் கீதையில் நிஷ்காம்ய கர்மா செய்தவர்கள் கண்டிப்பாகப் பலன் அடைவார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.

அதேபோல் இந்த ஆன்ம கர்மாக்களிலும் கூட காம்ய கர்மாக்கள் உள்ளன, நிஷ்காம கர்மாக்கள் உள்ளன.

1) **ஆன்ம காம்ய கர்மா: -**

பலர் இந்த தியானத்திற்கு வந்த பிறகு, தங்களின் ஆசைகளுக்காக ஒரு சங்கல்பம் செய்து தியானம் செய்கிறார்கள். அப்படி ஒரு இலக்கை வைத்து தியானம் செய்தால் அது ஆன்ம காம்ய கர்மா ஆகிறது. அதனால்தான் நான் எப்போதும் சொல்வேன், நீங்கள் எந்த சங்கல்பமும் செய்யத் தேவையில்லை; நீங்கள் செய்ய வேண்டிய தியானத்தைச் சரியாகச் செய்தால், உங்களுக்குக் கிடைக்க வேண்டியது தானாகவே வந்து சேரும்.

ஏனெனில், இந்தப் பிரபஞ்சத்தை இயக்குபவருக்கு எல்லாம் தெரியும், நீங்கள் அவரிடம் எதையும் கேட்க வேண்டிய அவசியமில்லை. எனவே கோரிக்கைகளும், சங்கல்பங்களும் தேவையில்லை. அதனால்தான் பத்ரிஜி அவர்கள், தியானம் கற்றுக் கொடுத்துப் பணம் வாங்கக்கூடாது என்று சொன்னார். தியானம் கற்றுக் கொடுப்பதற்குப் பணம் வாங்கினால், அது ஒரு பலனை எதிர்பார்த்துச் செய்யும் செயலாகிவிடும். அதனால்தான் நான் சொல்வது - உங்கள் செயலில் மட்டும் கவனம் செலுத்துங்கள், எதிர்பார்ப்பதில் அல்ல என்று கூறுவேன். நீங்கள் செய்ய வேண்டியதைச் சரியாகச் செய்தால், எது எப்போது வர வேண்டுமோ அது அப்போது வந்து சேரும். நீங்கள் ஏன் பதற்றப்படுகிறீர்கள்? என்று கேட்பேன்?

ஆகையால், நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இந்த கர்ம பலன்களை நாம் உடலை விட்டுவிட்டு அடுத்த பிறவி எடுத்தாலும் அனுபவிக்க நேரிடும். எனவே

வருவதை ஏற்றுக்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். அதுமட்டுமல்ல, பாவக் கர்மாக்கள் வேண்டாம், புண்ணிய கர்மாக்கள் வேண்டாம்; மோட்சத்தைத் தரும் 'முக்தி கர்மாக்களை' பலன் எதிர்பாராமல் (நிஷ்காம்யமாக) செய்ய வேண்டும்.

**2) ஆன்ம நிஷ்காம்ய கர்மா: -**

நீங்கள் லட்சக்கணக்கிலோ, கோடிக்கணக்கிலோ கொடுக்க வேண்டிய அவசியமில்லை. உங்களால் முடிந்த ஒரு சிறிய தொகையைக் கொடுத்தாலும் அது பெரியதுதான்! அதற்கு பணமே கொடுக்க வேண்டும் என்ற அவசியமில்லை; பணத்தை விடப் பயனுள்ள உங்கள் நேரத்தைக் கொடுங்கள், உங்கள் சொற்களை (வாக்கு) கொடுங்கள், உங்கள் சக்தியைக் கொடுங்கள், உங்கள் வாழ்க்கையைக் கொடுங்கள். இவையெல்லாம் ஆன்மாவிற்காகச் செய்யப்படும் சேவைகள். இவை நிச்சயமாக உங்கள் ஆன்ம உயர்வுக்குப் பெரிதும் உதவும். இவை அனைத்தையும் பலன் எதிர்பாராமல் செய்தால், உடலை விட்ட பிறகு மிகவும் உன்னதமான உலகத்தை அடைவீர்கள். பிறகு நீங்கள் விரும்பிய பிறவி உங்களுக்குக் கிடைக்கும்.

நாம் அனைவரும் அதிகாலையில் எழுந்து தியானம் செய்கிறோம், ஞானத்தை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்கிறோம், புத்தகங்கள் படிக்கிறோம், செய்திகளைக் கேட்கிறோம் பலனை எதிர்பார்க்காமல் (நிஷ்காம்யமாக) நாம் சேவை செய்கிறோம். அவ்வாறு செய்வதால் கிடைக்கும் பலன் கண்களுக்குத் தெரியாது. ஆனால், உங்கள் கணக்கில் அது பதிவாகும். அந்தக் கணக்கைத்தான் ஆகாஷிக் ரெக்கார்ட்ஸ் (Akashic Records) என்று அழைக்கிறோம்.

எனவே, பலன் கண்ணுக்குத் தெரியவில்லை என்பதற்காக, அது கிடைக்காது என்று நினைக்க வேண்டாம். செய்த ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு. நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் இயற்கையில் பதிவாகிறது. அதன் பலன் கண்டிப்பாகத் தரப்படும். அதனால்தான், செய்த ஒவ்வொரு செயலுக்கும் காலம் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பலன் கண்டிப்பாக வந்தே தீரும் என்று பத்ரிஜி அவர்கள் கூறியுள்ளார். எனவே, நாம் எதையும் கேட்க வேண்டிய அவசியமில்லை.

நீங்கள் செய்த எதுவும் வீணாகாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். பாவக் கர்மாக்களைச் செய்யாதீர்கள், ஆடம்பரங்களுக்குச் செல்லாதீர்கள், பெயர் புகழை எதிர்பார்க்காதீர்கள், ஆசை வலைக்குள் விழாதீர்கள், இந்த ஆன்மீக மார்க்கத்தில் பணம் சம்பாதிக்க முயலாதீர்கள். நீங்கள் செய்யும் புண்ணிய கர்மாக்கள் பலனை எதிர்பார்க்காமல் (நிஷ்காம்யமாக) இருக்க வேண்டும் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

முக்கியமாக, தேக பாவக் கர்மாக்களை விடக் கொடியது ஆன்ம பாவக் கர்மாக்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இதைச் செய்பவர்கள் மிகப் பெரிய இழப்புகளைச் சந்திக்க நேரிடும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

# கர்மம் - அகர்மம்
# ஸ்ரீ கிருஷ்ணரின் போதனை

**ஸ்லோகம்**:

**கிம் கர்ம கி மகர்மேதி கவயோப்யத்ர மோஹிதா:|**
**தத்தே கர்ம ப்ரவக்ஷ்யாமி யஜ்ஞாத்வா மோக்ஷ்யஸே அசுபாத் ||**
**(பகவத் கீதை 4:16)**

**பொருள்**: "கர்மா என்றால் என்ன?அகர்மம் என்றால் என்ன? என்பதைத் தீர்மானிப்பதில் அறிஞர்கள் கூடக் குழப்பமடைகிறார்கள். எனவே, எதை அறிந்தால் நீ துன்பகரமான அறியாமையிலிருந்து விடுபடுவாயோ, அந்த கர்மத்தை பற்றி நான் உனக்கு உபதேசிக்கிறேன்".

ஸ்ரீ கிருஷ்ணர் சத்தியத்தையே கூறுகிறார். அது அனைவருக்கும் பிரமாணமானது (ஆதாரப்பூர்வமானது), அதன்படி நடப்பது அவசியமானது.

துன்பத்தைத் தரும் அறியாமையிலிருந்து வெளிவர வேண்டும் என்று ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார். அத்தகைய அறியாமை நீங்க வேண்டுமென்றால் ஞானம் பெற வேண்டும். ஞானம் பெற்றால் துயரத்திலிருந்து விடுபடலாம். அறியாமையிலிருந்து விடுபட வேண்டுமென்றால் கர்மா என்றால் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். மேலும் அவர், "எது கர்மம், எது அகர்மம் என்று தெரியாமல் சாதாரண மக்கள் மட்டுமல்ல, பெரிய பெரிய அறிஞர்கள் கூட குழப்பமடைகிறார்கள்" என்று கூறியுள்ளார்.

அதாவது, அறிஞர்களுக்குக் கூட இது புரிவதில்லை என்று ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார். எனவே, நாம் கர்மாக்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். உண்மையில் எந்தக் கர்மாக்கள் சிறந்தவை, எந்தக்

கர்மாக்கள் ஆதாரப்பூர்வமானவை, எவை ஆதாரமற்றவை, எவை விலக்கப்பட்டவை (நிஷித்தமானவை), எவை ஏற்றுக்கொள்ளத்தக்கவை என்பதைத் தெரிந்துகொள்வது நம் அனைவருக்கும் அவசியம்.

ஏனென்றால், கர்மாவின் சொரூபத்தை (தன்மையை) அறிந்தால் மட்டுமே எவரும் லௌகிக பந்தங்களிலிருந்து விடுதலை பெற முடியும். உலகியல் பந்தங்களில் சிக்கிக் கொள்ளாமல் இருக்க வேண்டுமென்றால், இந்த கர்மா குறித்த விழிப்புணர்வு இருக்க வேண்டும்.

எனவே, உடல் நீங்கிய பிறகு மீண்டும் மற்றொரு உடலில் பிரவேசிக்காமல் தடுக்கும் '**மறுப்பிறப்பற்ற நிலையை**' (ஜன்ம ராஹித்யம்) அளிக்கும் செயல்களையே செய்ய வேண்டும்.

இயல்பாகவே ஆன்மாவாகிய நாம், இறக்கும் போது உடலை விட்டு விடுகிறோம். மேல் உலகங்களில் சில காலம் தங்கியிருந்து மீண்டும் ஒரு உடலை எடுத்துக் கொள்கிறோம். அப்படி மற்றொரு உடலில் பிரவேசிக்காமல் இருப்பதையே 'மறுப்பிறப்பற்ற நிலை' என்கிறோம், இதனை 'மோட்சம்' என்றும் கூறுகிறார்கள். அத்தகைய மோட்சத்தைத் தரும் செயல்களையே செய்ய வேண்டும் என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறியுள்ளார். அதற்கு 'கர்மா' என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் இன்னும் என்ன கூறினார் என்றால், அனைத்தையும் விட '**கர்ம பலனைத் தியாகம் செய்வது**' உயர்ந்தது என்று கீதையில் கூறியுள்ளார். எனவே, எவை கர்மாக்களாகக் கருதப்படுகின்றன? என்ற புரிதல் முதலில் நமக்குத் தேவை. அவ்வாறு கர்மாக்களாகக் கருதப்படுபவற்றை நிஷ்காமமாக, அதாவது "**பலனை எதிர்பார்க்காமல்**" செய்ய முடிந்தால்,

அப்போது வாழ்க்கையின் இலட்சியமான மோட்சத்தை அடைவோம் என்று ஸ்ரீ கிருஷ்ணர் கூறியுள்ளார்.

எனவே கர்மா என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்வோம்.

சாதாரண மனிதர்கள், புண்ணிய காரியங்களை (நற்செயல்களை) உயர்ந்ததாகக் கருதுகிறார்கள். ஏனென்றால், அறிஞர்கள் மற்றும் குருமார்கள் பலரும் பாவங்களைச் செய்யக் கூடாது, புண்ணியங்களைச் செய்ய வேண்டும் என்று கூறிக்கொண்டே இருப்பார்கள். அதனால் செய்ய வேண்டியவை புண்ணிய கர்மாக்களே என்று சாமானியர்கள் நினைக்கிறார்கள்.

ஆனால் யோகிகளின் பார்வையில் புண்ணிய கர்மாக்கள் கூட 'அகர்மங்களாகவே' கருதப்படுகின்றன. இந்த விஷயத்தை ஷியாமா சரண் லாஹிரி அவர்கள் தெரியப்படுத்தியுள்ளார். அவர் என்ன கூறினார் என்றால், சாதாரண மனிதர்கள் புண்ணிய கர்மாக்களை கூட கர்மாக்களாக கருதுகிறார்கள், ஆனால் யோகிகளின் பார்வையில் அவை "அகர்மங்களாகவே" கருதப்படுகின்றன என்று கூறினார். இங்கே 'அகர்மம்' என்றால் பலன் இல்லாத செயல் என்று அர்த்தம்.

அறிஞர்கள் கூட புண்ணிய கர்மமே மிகச் சிறந்த செயல் என்று கருதுகிறார்கள். ஆனால் புண்ணிய கர்மாக்களை பலன் தராத செயல்களாகவே யோகிகள் கருதுகிறார்கள் என்று லாஹிரி மகாசயர் கூறியுள்ளார். ஆனால், ஒவ்வொரு செயலுக்கும் ஒரு பலன் இருக்குமே? பலன் இல்லாத செயல் எப்படி இருக்க முடியும்? என்று உங்களுக்குச் சந்தேகம் வரலாம். ஆனால், இதைப் பற்றி நாம் மிகவும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

இந்த ஜன்மத்தில் நீங்கள் புண்ணிய கர்மாக்களைச் செய்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதன் பலனாக மறுபிறவியில் போகங்களை அனுபவிப்பீர்கள்.

நிறையப் பணம் இருக்கும், பல சுகங்களை அனுபவிப்பீர்கள். ஆனால், எவ்வளவு காலத்திற்கு அனுபவிப்பீர்கள்? நீங்கள் செய்த புண்ணியம் தீரும் வரை மட்டுமே அதை அனுபவிக்க முடியும். அந்தப் புண்ணியம் தீர்ந்துவிட்டால், அதன் பலனும் இருக்காது அல்லவா?

எனவேதான், யோகிகள் புண்ணிய கர்மாவை 'அகர்மம்' (பயனற்ற செயல்) என்று கருதுகிறார்கள். உதாரணமாக, உங்களிடம் பணம் இருக்கிறது, அதைச் செலவு செய்துவிட்டீர்கள். இப்போது உங்களிடம் பணம் இருக்கிறதா? என்றால் "ஒன்றும் இல்லை" என்றுதான் சொல்வீர்கள்.

அதனால்தான் யோகிகள், அப்படிப்பட்ட கர்மாவால் எங்களுக்கு என்ன பயன்? என்று கேட்கிறார்கள். யோகிகள் அத்தகைய செயல்களைக் கர்மாவாகவே கணக்கிடுவதில்லை. அதனால்தான் பத்ரிஜி அவர்கள் "பாவம் மட்டுமல்ல, புண்ணியமும் நமக்கு வேண்டாம்" என்று கூறுகிறார்.

எனவே, எந்தச் செயல் ஆன்மாவிற்குப் பலன் தருகிறதோ, எதன் பலன் ஆன்மாவிற்கு சென்றடைகிறதோ, அதையே யோகிகள் "கர்மா" என்று கருதுகிறார்கள். அதாவது ஆன்மாவை அறிந்துகொள்வதற்கும், ஆன்மாவின் உயர்விற்கும், ஆன்ம லாபத்திற்காகவும் செய்யப்படும் செயலே யோகிகளின் பார்வையில் உண்மையான கர்மாவாகக் கருதப்படுகிறது.

அத்தகைய கர்மாவின் மூலமாகவே அவர்கள் ஆத்மானுபவம் என்னும் மோட்சத்தை அடைய முடிகிறது, வாழ்க்கையின் இலட்சியத்தை எட்ட முடிகிறது. அப்படிப்பட்ட செயல் என்பது ஒன்றே ஒன்றுதான், அதுதான் 'தியானம்'.

எனவே "மூச்சின் மீது கவனம்" வைக்கும் தியானம் ஒன்றே ஆன்மா சம்பந்தப்பட்ட செயல் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதனால்தான் தியானம் மட்டுமே யோகிகளின் பார்வையில் கர்மாவாக அல்லது உண்மையான பலன் தரும் செயலாகக் கருதப்படுகிறது. மற்றவை அனைத்தையும் அவர்கள் அகர்மா என்றே கருதுகிறார்கள், அதாவது ஆன்ம ரீதியாக பலன் இல்லாத செயல்களாகக் கருதுகிறார்கள்.

ஏனென்றால், புண்ணிய கர்மாக்கள் தற்காலிகமான, சுகபோகங்கள் நிறைந்த பௌதிக வாழ்க்கையைத் தருகின்றன. ஆனால் அவை பிறவிப் பெருங்கடலை அறுக்க (ஜன்ம ராஹித்யம்) உதவாது. அதாவது அவை பந்தத்தையே உண்டாக்குகின்றனவே தவிர, பந்தங்களிலிருந்து விடுதலை அளிக்காது. நான் கூட பத்ரிஜி அவர்களைச் சந்திக்கும் வரை புண்ணிய கர்மாக்களையே செய்து வந்தேன், அவையே உயர்ந்தவை என்றும் நினைத்து கொண்டிருந்தேன். ஆனால் பத்ரிஜி அவர்கள் வந்த பிறகுதான் எனக்கு உண்மை புரிந்தது.

பாருங்கள், இன்பமான வாழ்க்கையை அனுபவித்து கொண்டிருப்பவர்களிடம் தியானம் செய்யச் சொன்னால், "என் வாழ்க்கை நன்றாகத்தானே இருக்கிறது, நான் ஏன் தியானம் செய்ய வேண்டும்?" என்று கேட்பார்கள். ஆனால் இந்த ஒரு ஜென்மம் நன்றாக இருக்கலாம், ஆனால் மீண்டும் ஒரு பிறவி எடுக்கும்போது, அப்போது புண்ணிய கர்மாக்கள் கைவசம் இல்லையென்றால் மீண்டும் துக்கம்தானே மிஞ்சும்?

இப்போது நாம் தினமும் அதிகாலை 3:30 மணிக்கு எழுந்து, நான்கு மணிக்குள் தியானத்தில் அமர்ந்து, 6:30 மணி வரை ஏன் தியானம் செய்கிறோம்? ஏன் இவ்வளவு சிரமப்படுகிறோம்? என்றால், இந்தப் பந்தத்திலிருந்து விடுபட்டு பிறவி இல்லா நிலையை அடைவதற்கு தான்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் 'நிஷ்காம கர்மா' செய்யச் சொன்னார். எனவே, நம்மை பந்தங்களிலிருந்து விடுவிக்கும் தியானத்தை நிஷ்காமமாகச் செய்தால், அதாவது எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் செய்தால், எவரும் வாழ்க்கையில் மிக உயர்ந்த நிலையை அடையலாம்.

எனவே, "எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல் செய்யும் தியானமே உண்மையான நிஷ்காம கர்மா" என்பதை நாம் உணர வேண்டும். மனிதன் செய்யும் அனைத்துச் செயல்களை விடவும் இதுவே மிக உயர்ந்த செயல். இதனையே ஸ்ரீ கிருஷ்ண பகவான் பகவத் கீதையின் மூலம் போதித்துள்ளார்.

## Programs by the Tatavarthy's that will be broadcasted on YouTube:

a) Channel name: **Tatavarthy Veera Raghava Rao**

This channel has 2,000+ videos featuring messages from Mr and Mrs Tatavarthy.

b) PMC has also launched a YouTube channel for Brahmarshi Tatavarthy Veera Raghava Rao.

Channel name: **Brahmarshi Tatavarthy Veera Raghava Rao.**

c) For messages from trainees who have trained under Mr. and Mrs. Tatavarthy, watch the Tatavarthy Spiritual Trainees YouTube channel.

d) You can also go directly to the YouTube app, type Tatavarthy Veera Raghava Rao in the search bar, and watch all the Mr. and Mrs.Tatavarthy videos.

# தியானம் என்றால்?

கவனித்துப் பார்த்தால், யாரைப் பார்த்தாலும் மரணம் வரை உள்ள விஷயங்களைப் பற்றியே கவனித்துக் கொள்கிறார்கள், யோசிக்கிறார்கள், அவற்றிற்கே முக்கியத்துவம் தருகிறார்கள். மரணத்திற்குப் பிறகும் "கூடவே வருபவற்றிற்கு" எவரும் முக்கியத்துவம் அளிப்பதில்லை. ஆனால் மரணத்திற்குப் பிறகும் "கூடவே வருபவற்றின்" மீதுதான் உங்களது எதிர்காலப் பிறவி ஆதாரப்பட்டு இருக்கிறது.

பலர் "என் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே" என்று இந்தப் பிறவியைப் பற்றி வருத்தப்படுகிறார்கள். ஆனால், எதிர்காலத்தைச் சீர்ப்படுத்திக் கொள்வதைப் பற்றி யோசிப்பதில்லை. சிந்தித்துப் பாருங்கள், இந்தப் பிறவி நிரந்தரமானதா? என்றால் இல்லை. அதாவது இப்போது இருப்பவை எதுவுமே நிரந்தரம் இல்லை, இப்போது இருப்பவர்களும் கூடச் சில காலமே இருப்பார்கள்.

அப்படியானால் உனக்கு இந்தப் பிறவி பிடிக்காதபோது, உனக்கு விருப்பமான பிறவி அமைய வேண்டுமென்றால்? "கூடவே வருபவை" எவை என்பதைத் தெரிந்துகொண்டு, அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை வளர்த்துக்கொண்டு, அதற்கேற்ப அவற்றைச் சரிசெய்துகொண்டால், உன்னுடைய எதிர்காலப் பிறவி மிகவும் சிறப்பாக இருக்கும்.

எனவே புத்திசாலிகள் "கூடவே வருபவை" பற்றிச் சிந்திப்பார்கள். அதனால்தான் நாம் இவற்றிற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து, இவ்வளவு ஆழமாகப் பகுத்தாய்வு செய்கிறோம்.

அப்படியானால் கூடவே வருபவை எவை?

1) வாசனைகள் (விருப்பங்கள் அல்லது பற்றுகள்).

2) சமஸ்காரங்கள்(பழக்கவழக்கங்கள்).

3) கர்மாக்கள், 4) ஞானம்.

இவற்றைப் பற்றித்தான் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம்.

இப்போது கர்மாக்களைப் பற்றிப் பார்ப்போம். இந்தக் கர்மாக்களைப் பற்றி ஒவ்வொருவருக்கும் விழிப்புணர்வு இருக்க வேண்டும். இது மிகவும் முக்கியமானது . இந்தப் பிறவியில் நீங்கள் செய்யும் கர்மாக்களே உங்கள் வருங்காலத்தைச் செதுக்குகின்றன. எனவே இந்தக் கர்மாக்கள் எத்தனை வகை? எத்தகைய கர்மாக்களைச் செய்ய வேண்டும்? எத்தகைய கர்மாக்கள் நமக்கு நன்மையைத் தரும்? என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

கர்மாக்களை மூன்று விதமாகச் செய்பவர்கள் இருக்கிறார்கள் என்று நாம் சொல்லிக்கொண்டோம்.

சிலர் ஆரம்ப நிலைப் பிறவிகளில் இருப்பவர்கள் பாவ கர்மாக்களைச் செய்கிறார்கள். இடைப்பட்ட நிலைப் பிறவிகளில் இருப்பவர்கள் புண்ணிய கர்மாக்களைச் செய்கிறார்கள். இறுதி நிலைப் பிறவிகளுக்கு வரும்போது முக்தி தரும் கர்மாக்களைச் செய்கிறார்கள். இந்த முக்தி கர்மாக்களைப் பற்றித் தியான மார்க்கத்திலும், ஞான மார்க்கத்திலும் வந்தவர்களுக்கு மட்டுமே தெரியும்.

ஸ்ரீ கிருஷ்ணர், எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் தியானம் "மூச்சின் மீது கவனம்" செய்தால், அதுவே உண்மையான நிஷ்காம கர்மா என்று கூறியுள்ளார்.

இதையே ஓஷோ என்ன கூறுகிறார் என்றால்?

ஓஷோ, எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காத, செயலற்ற மனநிலையே தியானம் என்று கூறுகிறார். செயலற்ற என்றால் எதையும் செய்யாமல், அதாவது எண்ணங்கள் இல்லாமல் இருக்கும் மனநிலையே தியானம் என்று ஓஷோ கூறியுள்ளார்.

எனவே, பலனை எதிர்பார்த்தால் அது தியானம் ஆகாது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பிரதிபலனை எதிர்பார்க்காமல் செய்யும் தியானமே மோட்சத்திற்கு வழிவகுக்கும்.

இப்போது நாம் அனைவரும் எந்த ஒரு சங்கல்பமும் (உறுதிமொழி) இல்லாமல், எந்த ஒரு ஆசையும் இல்லாமல் அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறோம். "செய்ய வேண்டியதைச் செய்தால், வரவேண்டியது தானாக வரும்" என்பது நமக்குத் தெரியும். அதனால்தான் பிரதிபலனை எதிர்பார்க்காமல் 'மூச்சின் மீது கவனம்' வைத்துத் தியானம் செய்கிறோம்.

காலை நேர 'ஜூம்' (Zoom) வகுப்புகளில் பங்கேற்கிறோம், அதேபோல் ஒவ்வொரு மாதமும் பீமாவரம் வகுப்புகளில் மணி கணக்கில் அமர்கிறோம். இதுவே இறுதியில் 'மோட்சத்திற்கு' வழிவகுக்கும்.

இதனைப் புரிந்து கொள்வதற்காக ஓஷோ ஒரு கதையைக் கூறியுள்ளார். அந்தக் கதை என்னவென்று இப்போது தெரிந்துகொள்வோம்.

ஒரு நபர் மோட்சம் அடைவதற்காகப் பலவிதமான முயற்சிகளைச் செய்து வருகிறார். பலரைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார். அப்போது ஒரு நபர் அவரிடம், "இமயமலையில் ஒரு குரு இருக்கிறார். நீ அவரைச் சென்று சந்தித்தால், அவரைச் சந்திக்க முடிந்தால், உன்னுடைய கோரிக்கை எளிதில் நிறைவேறும்" என்று சொன்னார்கள்.

உடனே அந்த நபர் மிகுந்த ஆசையுடன் தன் சொத்துக்கள் அனைத்தையும் விற்றுவிட்டு இமயமலைக்குச் சென்றார். இமயமலை என்ன அவ்வளவு சிறியதா? அவர் இமயமலையில் பல இடங்களுக்குச் சுற்றித் திரிந்தார். அவரிடமிருந்த பணம் முழுவதும் தீர்ந்துவிட்டது. ஆனாலும் அவருக்கு அந்த குரு தென்படவில்லை.

அப்படிச் சுற்றித் திரியும் போது யாரோ ஒருவர் அவரிடம், இந்த இமயமலையில் இன்ன இடத்தில் ஒரு முதியவர் இருந்தார், அவர் மிகுந்த சக்தி படைத்தவர், பல மகிமைகள் கொண்டவர்... ஒருவேளை நீ தேடுவது அவராகத்தான் இருக்கும், அங்கு போய் பார்" என்று சொன்னார்கள். உடனே அந்த நபர் ஆசையுடன் அந்தப் பகுதிக்குச் சென்று தேடினார்.

ஆனால், அவருக்கு அவர் தென்படவில்லை. அவரிடமிருந்த உணவும் தீர்ந்துவிட்டது. உண்பதற்கு ஏதுமில்லை, உடலில் இருந்த சக்தியும் குறைந்துவிட்டது, நடக்க முடியாமல் கீழே விழுந்துவிட்டார். அப்படி அவர் விரக்தியில் இருந்த சமயத்தில், சற்றுத் தொலைவில் ஒரு சிறிய குடிசை தெரிந்தது. அப்போது அவர், "நான் தேடும் குருநாதர் அங்கே இருக்கலாம்" என்று நினைத்தார்.

உடனே அவர் நடக்க முடியாவிட்டாலும், தவழ்ந்து சென்று அந்த குடிசையை அடைந்தார். உள்ளே எட்டிப் பார்த்தார், ஆனால் உள்ளே எவரும் காணப்படவில்லை.

அந்த நொடியில் அவரிடமிருந்த ஆசைகள் அனைத்தும் அழிந்து போயின. இனி என்னால் முடியாது என்று நினைத்துக் கொண்டே கீழே விழுந்தார். சிறிது நேரத்தில் ஏதோ சத்தம் கேட்டது. யாரோ ஒரு முதியவரின் குரல் கேட்டது. அவர் என்ன கேட்டார் என்றால், மகனே, நீ ஆசைப்பட்டதை அடைந்தாயா? என்று கேட்டார். அப்போது அந்த நபர் "ஆம்" என்றார். "தியானம் என்றால் என்னவென்று தெரிந்ததா?" என்று கேட்டார். அந்த நபர் "ஆம்" என்றார்.

அதன்பிறகு அந்தப் பேசிய நபர் காணப்படவில்லை. அப்படியானால் அந்த நொடியில் என்ன நடந்தது? அந்த குடிசையில் யாரும் காணப்படாதபோது, அவரிடமிருந்த ஆசைகள் அனைத்தும் அற்றுப்போயின. கோரிக்கைகள் யாவும் மறைந்தன, மனது எதையும் கோரவில்லை.

அவரிடம் எந்த உணர்ச்சிகளும் இல்லை, அனைத்து ஆசைகளுடன் சேர்த்து 'மோட்சம்' அடைய வேண்டும் என்ற ஆசையும் கூட மறைந்து போனது.

அந்த நொடியில் அவருக்கு ஞானோதயம் ஏற்பட்டது. அவருடைய மனம் ஒரேடியாகச் சூனியமானது (அமைதியானது). உடனே அவர் தான் யார் என்பதை உணர்ந்து கொண்டார். அவர் எதைத் தேடி அலைந்தாரோ, அதனை அடைந்தார். எல்லையற்ற ஆனந்தத்தை அனுபவித்தார். தியானம் என்றால் என்ன என்பதை அவரால் உணர முடிந்தது.

இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது என்றால்.. அவர் அதுவரை மோட்சம் அடைய வேண்டும் என்ற ஆசையோடு எவ்வளவோ கஷ்டப்பட்டார். ஆனால், அந்த ஆசை நிராசையாகி கடைசியில் அந்த ஆசையையும் அவர் விட்டொழிந்த போது, அந்த நொடியில் அவருக்கு ஞானோதயம் உண்டானது. அனைத்தையும் உணர்ந்து கொண்டார். எப்போதும் இல்லாத பேரானந்தத்தை அனுபவித்தார். அதாவது 'ஆன்ம சாட்சாத்காரம்' (தன்னை அறிதல்) பெற்றார்.

எனவே ஓஷோ கூறிய இந்த கதையின் மூலம், “எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் செய்யும் தியானமே உண்மையான நிஷ்காம கர்மம்” என்பது நமக்குத் தெளிவாகிறது.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறிய நிஷ்காம கர்மா என்பது, எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் செய்யும் தியானமே என்று நமக்குத் தெரிகிறது. இதனையே "கர்மயோகம்" என்றும் கூறுவார்கள். எனவே, எவராயினும் சரி, எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல் தியானம் செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதனால், நம் மனதிற்குள் ஏதேனும் ஆசைகளோ, கோரிக்கைகளோ இருந்தால் நாம் அந்தப் பரிபூரண

நிலையை அடைய முடியாது, அதாவது 'ஆன்ம தரிசனத்தை' அடைய முடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

நம்மிடம் பற்றுதல்கள் இருக்கும் கோரிக்கைகள் இருக்கும், ஆசைகள் இருக்கும். இவற்றில் எது இருந்தாலும், எத்தனை முயற்சிகள் செய்தாலும் நாம் அந்த நிலையை எட்ட முடியாது, ஆன்ம தரிசனம் பெற முடியாது. எனவே, இதனை மனம் உணர்ந்து கொள்ள வேண்டும். மெல்ல மெல்ல, நாம் செய்யும் சாதனையின் தீவிரத்தைப் பொறுத்து அந்த நிலையை அடையலாம். அப்படிப்பட்டவரை விட அதிர்ஷ்டசாலி எவரும் இல்லை.

**Information available on Tatavarthy's website:**

***Website address: www.tst.org.in***

a) Details of programs conducted under the guidance of Mr. and Mrs. Tatavarthy and Google Maps location are available.

b) All books by Mr. and Mrs. Tatavarthy are available in PDF format for free download in Telugu, Kannada, Hindi, and English languages.

c) All the messages of Mr. and Mrs. Tatvarthy are organized in concept-wise YouTube playlists.

d) Summaries of Mr. and Mrs. Tatavarthy's messages are provided in the form of quotations.

e) The gallery of Mr. and Mrs. Tatavarthy is also available.

For registration of a 3 day free meditation and soul-knowledge training classes held in Bhimavaram on the 1st, 2nd, and 3rd of every month, contact Sindhura, 8555995217.

# கர்மாவில் அகர்மா-அகர்மாவில் கர்மா

**- ஸ்ரீ கிருஷ்ண பகவான்**

இறந்த பிறகு "கூடவே வருபவை" பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். இப்போது, நாம் கர்மாவைப் (செயல்களைப்) பற்றிப் பேசுகிறோம். எதிர்கால வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டுமானால், நாம் செய்யும் செயல்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறிய மற்றொரு ஸ்லோகத்தைப் பற்றிப் தெரிந்து கொள்வோம். ஏனென்றால் ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறியவை மிகவும் முக்கியமானவை. அவற்றைத் தெரிந்துகொள்ளாமல் நாம் கர்மாக்களைச் செய்தால், நஷ்டப்படப்போவது நாம்தான்.

நாம் மிகப் பெரிய காரியங்களைச் செய்வதாக நினைத்து கொள்கிறோம். ஆனால், அந்த மகான்கள் கூறியவற்றின் பொருளைப் புரிந்து கொள்ளாமல், நம் இஷ்டப்படி எதையாவது செய்தால், நாம் எதிர்பார்க்கும் பலன் கிடைக்காது. மாறாக நஷ்டத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும். எனவே, ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறிய 4-வது அத்தியாயத்தில் உள்ள 18-வது ஸ்லோகத்தைப் பற்றிப் பார்ப்போம்.

**ஸ்லோகம்**:

**கர்மண்யகர்ம ய: பஷ்யேத் அகர்மணி ச கர்ம ய: |**
**ஸ புத்திமான் மனுஷ்யேஷு ஸ யுக்த: க்ருத்ஸ்நகர்மக்ருத் ||**

**(பகவத் கீதை 4-18)**

**விளக்கம்:** யார் ஒருவர் செயலில் (கர்மாவில்) செயலற்ற தன்மையையும் (அகர்மாவையும்), செயலற்ற தன்மையில் செயலையும் காண்கிறாரோ, அவரே மனிதர்களில் புத்திசாலி. அவரே யோகி, அவர் அனைத்துக் கர்மாக்களையும் முழுமையாக செய்தவர் ஆவார்.

ஏனென்றால், அனைத்திற்கும் மனமே பிரதானம் என்பதால், கர்மா செய்யாதவர்களுக்கும், செய்தவர்களுக்கும் அவரவர் எண்ணங்களுக்கு (பாவம்) ஏற்றவாறு பலன் கிடைக்குமே தவிர; வெறும் செயலை மட்டும் வைத்து அல்ல. இதையே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா மேலுள்ள ஸ்லோகத்தின் வாயிலாகக் கூறியுள்ளார். இது பலருக்குப் புரியாமல் செயலை மட்டும் பார்க்கிறார்களே தவிர, அந்தச் செயலுக்குப் பின்னால் உள்ள எண்ணத்தைப் புரிந்து கொள்வதில்லை. மகா யோகீஸ்வரான கிருஷ்ண பரமாத்மா அவர் கூறியவற்றைச் சாமானியர்கள் புரிந்து கொள்வது மிகவும் கடினம், அவர்களால் புரிந்து கொள்ளவும் முடியாது.

பலர் பூஜைகளும் ஆராதனைகளும் செய்கிறார்கள். எதற்காக என்றால், இறைவன் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவார் என்று நம்பி செய்கிறார்கள். அதாவது, அவர்களின் பக்தி கோரிக்கைகளின் மீது இருக்கிறதே தவிர இறைவனின் மீது இல்லை. அவர்களின் வெளிப்படையான செயல்கள் இறைவனை நோக்கியும், ஆனால் உட்புற எண்ணங்கள் (பாவம்) கோரிக்கைகளை நோக்கியும் இருப்பது இதன் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

ஆனால் மேற்கூறிய ஸ்லோகத்தின் மூலம் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், வெளிப்படையான செயல்களை விட எண்ணங்களே பிரதானம் என்பதால், இவர்களின் பக்தி இறைவனின் மீது இல்லாத காரணத்தினால் இறைவனின் அருளைப் பெற முடியாமல் போகிறார்கள். எனவே எண்ணம் தூய்மையாக இருக்க வேண்டும், அதாவது வெளித்தோற்றத்தில் மட்டுமல்லாது மனதாலும் நீங்கள் செய்யும் செயல் சுயநலமற்றதாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இதற்கு ஒரு சிறிய உதாரணத்தைப் பார்ப்போம். இரண்டு துறவிகள் பயணம் செய்து கொண்டிருக்கும்போது... அவர்களுக்கு வழியில் ஒரு ஆறு குறுக்கிட்டது. அவர்கள் ஆற்றைக் கடக்க முற்படும்போது, அங்கே ஒரு பெண் அந்த ஆற்றைக் கடக்க முடியாமல் நின்று கொண்டிருந்தாள். அந்த துறவிகளை கண்டதும், அவள் அவர்களைத் தன்னை ஆற்றைக் கடக்க உதவுமாறு வேண்டினாள். உடனே அவர்களில் ஒரு துறவி அவளைத் தூக்கிக்கொண்டு ஆற்றைக் கடக்க உதவினார்.

அதன் பிறகு அந்த இரண்டு சாதுக்களும் தங்கள் வழியில் சென்றனர். சிறிது தூரம் சென்ற பிறகு, இரண்டாவது துறவி, என்னப்பா, ஒரு பெண்ணைத் தொட்டு அபச்சாரம் செய்துவிட்டாயே? இந்த விஷயம் குருவுக்குத் தெரிந்தால் என்னவாகும் தெரியுமா? என்று கேட்டார். அப்போது முதல் துறவி ஆச்சரியத்துடன், "நாம் இரண்டு மைல் தூரம் வந்துவிட்டோம். இன்னும் நீ அவளை சுமந்து கொண்டிருக்கிறாயா? நான் அவளை அங்கேயே விட்டுவிட்டேனே!" என்று கேட்டார்.

இங்கே என்ன நடந்ததென்றால், முதல் துறவி அந்தப் பெண்ணின் வேண்டுகோளுக்கு இணங்க ஆற்றைக் கடக்க உதவினார். ஆனால் இரண்டாவது துறவி அந்தப் பெண்ணைத் தொடவில்லை என்றாலும், அவளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார்.

இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், அந்தப் பெண்ணைத் தொடவில்லை என்றாலும், இரண்டாவது சாதுவின் மனதில் அந்த எண்ணம் இருந்ததால், இரண்டு மைல் தூரம் கடந்த பின்னரும் அவர் அவளைச் சுமந்து கொண்டுதான் இருந்தார். அவர் அதை மறக்காமல் இருந்ததால், பௌதிகமாக எந்தச் செயலும் செய்யாவிட்டாலும், அவர் அந்தச் செயலைச் செய்தவராகவே கருதப்படுகிறார். முதல் துறவி அந்தப்

பெண்ணைத் தொட்டாலும், அவளுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர வேறு எந்த எண்ணமும் அவர் மனதில் இல்லாததால், அவர் செயலைச் செய்திருந்தாலும் அதைச் செய்யாதவராகவே கருதப்படுகிறார்.

அதனால்தான், ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறியபடி, "கர்மாவில் அகர்மா" என்றால், ஒரு செயலைச் செய்தாலும் தூய்மையான எண்ணத்துடன் இருந்தால் முதல் துறவியைப் போல அவர் அந்தச் செயலைச் செய்யாதவராகவே ஆகிறார்.

அதேபோல், இரண்டாவது துறவி அந்தச் செயலைச் செய்யாவிட்டாலும், அதைச் செய்தவராகவே கருதப்படுகிறார். இதனையே "அகர்மாவில் கர்மா" என்று அழைக்கிறார்கள். இதுவே மேற்கூறிய ஸ்லோகத்தின் மூலம் பகவான் கொடுத்த செய்தியாகும்

## பத்ரிஜியின் கோபம்

அதேபோல், பத்ரிஜியைப் பார்த்துப் பலர், "அவர் ஒரு கடவுள் போன்றவர் என்கிறார்களே, அவருக்கு ஏன் இவ்வளவு கோபம்?" என்று கேட்பார்கள். சிலர் வெளியே சொல்ல முடியாவிட்டாலும் மனதிற்குள்ளேயே நினைப்பார்கள். அவருடன் நெருக்கமாக இருப்பவர்களுக்குக் கூட இது புரிவதில்லை.

ஆனால் பத்ரிஜியின் கோபம் மற்றவர்களின் தவறான வார்த்தைகள், செயல்கள் மற்றும் அவர்களின் அறியாமையின் மீதே தவிர, தனிப்பட்ட முறையில் அவர்கள் மீது அல்ல. அவருடைய நோக்கம் எப்பொழுதும் அவர்களின் வாழ்க்கையைச் சரி செய்வதும், அல்லது அவர்களின் குணங்களை மாற்றுவதற்குதானே தவிர, அவர்கள் மீது வெறுப்பு, பகை அல்லது வஞ்சகத்தால் அப்படிச் செய்வதில்லை.

ஏனென்றால் அவருக்கு எதிரிகள் என்று யாரும் இல்லை. அதனால்தான், அவர் வெளிப்படையாக ஒரு செயலை (கோபத்தை) செய்வது போல் தெரிந்தாலும், அவர் அகர்மா செய்பவரே (செயலற்றவரே), அதாவது அந்தச் செயலால் பாதிக்கப்படாதவர். இதே விஷயத்தைப் பல குருமார்களிடமும் நாம் கவனிக்கலாம்.

அதேபோல், அவரிடம் யார் வந்தாலும் அவர்கள் ஞானத்தைப் பெறுவதற்காகவே வந்ததாக அவர் கருதுவார். ஞானத்திற்காக வருபவர்களின் அகந்தையை (Ego) போக்கவே எந்தவொரு குருவும் முயற்சிப்பார். சீடர்களின் அகந்தை நிலையைப் பொறுத்து ஒருவர் மீது கோபப்படுவார், ஒருவரிடம் எரிச்சலடைவார், ஒருவரைப் பொருட்படுத்தாதது போல இருப்பார், மற்றோருவரை அன்போடு விசாரிப்பார், வேறோருவரைக் கட்டிப்பிடித்துக் கொள்வார், இன்னோருவரை அடிக்கக் கூடச் செய்வார்! இப்படி அவர் நடத்தை பலவிதமாக இருக்கும்.

குருவின் நடத்தை எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்காது. அது சீடனைப் பொறுத்தே அமையும். சீடனிடம் உள்ள அகந்தையை நீக்கி, அவர்களை ஞானிகளாக மாற்றுவதற்கே எந்தவொரு குருவும் முயற்சிப்பார். அதுவே பத்ரிஜியின் முயற்சியும் கூட. எனவே அவர் பல செயல்களைச் செய்தாலும் அவர் அகர்மா செய்பவரே எந்தச் செயலும் அவரை ஒட்டுவதில்லை. ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறியதும் இதையேதான். அப்படிப்பட்ட பத்ரிஜியைச் சாமானியர்கள் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்?

அவர் கோபப்படுகிறார் என்று எண்ணி அவர்கள் சென்றுவிட்டால், நஷ்டம் அவர்களுக்குத்தானே? வெளியே சென்றுவிட்டால், அவரிடம் உள்ள ஞானம் அவர்களுக்குக் கிடைக்குமா? அந்த ஞானத்தைக் கொடுப்பவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்? எனவே

நஷ்டப்படுபவர் அவர்களே. அவர்களின் நன்மைக்காக அவர் செய்ததைத் தவறாகப் புரிந்து கொண்டால் அவர் என்ன செய்ய முடியும்?

இன்னும் சிலர், தங்களைத் திட்டவில்லை என்றாலும், வேறொருவரை அவர் திட்டுவதைக் கண்டு ஏன் அப்படித் திட்டுகிறார்? என்று கூறி அவரை விட்டுச் சென்றவர்கள் பலர் உள்ளனர்.

குருவின் செயல்கள் எவருக்கும் புரிவதில்லை. அவை எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்காது. எப்பொழுதும் குரு என்ன செய்தாலும் நமக்கு அது அவசியமற்றது, நாம் செய்யும் செயல்களின் மீதும், ஞானத்தைத் தேடுவதன் மீதும் மட்டுமே நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அதே வேலையைத்தான் நானும் செய்தேன். என்னிடம் ஏதேனும் குறை இருந்தால் அதைச் சரிசெய்து கொண்டேன். அதனால்தான் இந்த நிலைக்கு வளர எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

எனவே, ஒவ்வொருவரும் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறிய ஸ்லோகத்தையும், பத்ரிஜியின் செயல்களையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நாமெல்லாம் ஞான மார்க்கத்திற்கு வந்துள்ளோம். அவதார் மெஹர் பாபா இதைப் பற்றி மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். முமுக்ஷு (முக்தியைத் தேடுபவர்) என்றால் அந்தச் சாதகனுக்குக் குருவின் உதவி மிகவும் அவசியம் என்று சொல்லியிருக்கிறார்.

ஒரு சாதகன் தனது சொந்த முயற்சியால் ஈடுபடலாம், அவன் சுயமாகத் தன் வீட்டிலேயே அமர்ந்து பயிற்சி செய்யலாம், புத்தகங்களைப் படிக்கலாம். ஆனால், குருவின் உதவி இல்லாமல், இடைநிலை நிலைகளில் சிக்கிக்கொள்வான். ஆறாவது நிலையைத் தாண்டுவது

என்பது குருவின்றி சாத்தியமற்றது என்று அவர் கூறியுள்ளார்.

இதன் அடிப்படையில்தான் நான் "மெஹர் பாபா சந்தேசம்"(மெஹர் பாபாவின் செய்தி) என்ற புத்தகத்தை எழுதினேன். அந்தப் புத்தகத்தைப் படியுங்கள். உங்களுக்குச் சரியான வழிகாட்டுதல் கிடைக்கும்.

ஏனென்றால் நமக்கே தெரியாமல் நாம் இந்த மாயையில் விழுந்துவிடுவோம். அந்த குருவின் எச்சரிக்கைகளால் மீண்டும் நாம் சரியான பாதைக்குத் திரும்ப வாய்ப்பு கிடைக்கும்.

எனவே, ஒவ்வொருவரும் இந்த விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். இவை அனைத்தையும் புரிந்து கொண்டு, நாம் கடைப்பிடித்தால், இன்னும் பல பிறவிகள் எடுக்கத் தேவையில்லை. மிகக் குறைவான பிறவிகளிலேயே நாம் நமது இலக்கை அடைய முடியும்.

## To subscribe to Tatavarthy's YouTube channel:

When you click the YouTube link sent in the WhatsApp group, it will open the Tatavarthy Veera Raghava Rao channel. Once open, you will see the "Subscribe" button-click on it to subscribe. By clicking the bell icon next to it, you can receive notifications of new videos everyday.

Otherwise, visit www.tst.org.in/videos/ Click on "Tatavarthy Veera Raghava Rao" in Section I, or on the names in sections II & III. This will open the respective channels. Once open, click the "Subscribe" button, and by pressing the bell icon next to it, you can get daily video updates.

# ஞானம் (அறிவு)

யாராக இருந்தாலும் சரி, தன் வாழ்க்கையில் தன்னுடன் வரக்கூடியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். தன்னுடன் சரியானவற்றை எடுத்துச் செல்ல வேண்டும். அதாவது, ஆன்மாவுக்கு லாபம் தருபவற்றை எடுத்துச் செல்ல வேண்டும். அவ்வாறன்றி ஆன்மாவிற்கு நஷ்டத்தை உண்டாக்குபவற்றை எடுத்துச் செல்பவனை விட அறிவற்றவன் வேறு யாரும் இருக்க முடியாது.

அதனால்தான், தன்னுடன் எவற்றை எடுத்துச் செல்ல வேண்டும் என்று அறிந்து, தன் முயற்சியால் அவற்றைச் சம்பாதித்துக் கொண்டால், அவனை விட அதிர்ஷ்டசாலி வேறு எவரும் இருக்க முடியாது.

விசித்திரம் என்னவென்றால், உலகில் ஒவ்வொருவரும் பணம், குடும்பம் மற்றும் சொத்துக்களின் மீதே தங்கள் வாழ்க்கை முழுவதும் கவனம் செலுத்துகிறார்கள். ஆனால் அவற்றில் ஒன்று கூட அவர்களுடன் வராது. மேலும் அவற்றிற்காகச் செய்யக்கூடாத தவறுகளையும், பாவங்களையும் செய்கிறார்கள். இதனால் என்னவாகும்? அந்தப் பாவங்களின் பலன்களையும் சேர்த்தே தன்னுடன் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கும். அப்போது அவர்களின் எதிர்காலம் அழிந்து போகிறது. எனவே, தன்னுடன் எடுத்துச் செல்ல வேண்டியவை குறித்த விழிப்புணர்வு இருக்க வேண்டும்.

இப்போது தன்னுடன் எடுத்துச் செல்லக் கூடிய வற்றில் உள்ள 'ஞானம்' பற்றிப் பார்ப்போம். ஞானமும் கூடவே வரும். இந்த ஞானம் அனைவருக்கும் நிலையானது. ஞானம் அவ்வளவு உயர்ந்தது. மற்றவை எத்தனை இருந்தாலும் அவை அனைத்தும் நிலையற்றவை. ஞானம் ஒன்றுதான் நிரந்தரம்.

பத்ரிஜி அவர்கள் தன்னைப் பற்றி என்ன சொன்னாரென்றால்: "நான் இவ்வளவு ஞானத்தை

வெளிப்படுத்த முடிகிறது என்றால், அதற்கு பல பிறவிகளில் நான் எடுத்த முயற்சியே காரணம். நான் முன்னொரு பிறவியில் புத்தரிடம் ஆனந்தராக இருந்தேன், பிறகு மற்றொரு பிறவியில் பெஞ்சமின் பிராங்க்ளின் என்று சொல்லப்படும் மிகச்சிறந்த 'என்லைட்டன்ட் மாஸ்டர்' (Enlightened Master) ஆக இருந்தேன். அதன் பிறகு ஒரிசாவில் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து தியானம் செய்தேன், பிறகு ஹைதராபாத்தில் 'ஹஜ்ரத் இனாயத் கான்' என்ற ஆன்மீக வழிகாட்டியாக பிறந்தேன். அதன் பிறகு இந்தப் பிறவியில் பத்ரியாகப் பிறந்தேன்" என்று கூறியுள்ளார்.

அவரிடம் அபாரமான ஞானம் இருந்தது. அதுவெல்லாம் இந்தப் பிறவியில் வெளிப்பட்டது. அதனால்தான் மிகக் குறுகிய காலத்திலேயே இலட்சக்கணக்கான மக்கள் அவரைப் பின்பற்றினார்கள்.

ஏனென்றால் அனைவருக்கும் தேவைப்படுவது ஞானமே. அதனால்தான் ஞானத் தேடலில் உள்ளவர்கள் அனைவரும் அவரிடம் ஈர்க்கப்பட்டார்கள். நாம் அனைவரும் கூட அவரிடம் அவ்வாறே ஈர்க்கப்பட்டோம். அவருக்கு இவ்வளவு ஞானம், இவ்வளவு திறமை எப்படி வந்தது? அதாவது, இவை கடந்த பிறவிகளுடையது என்று எனக்குப் புரிந்தது.

நானும் கூட தியானம் செய்த பிறகு பல புத்தகங்களை எழுத முடிந்தது, பல வகுப்புகளை எடுக்க முடிகிறது, பல இடங்களுக்குச் செல்ல முடிகிறது. எனக்கும் இப்போது புரிகிறது - இதற்கு முந்தைய பிறவிகளில் நான் செய்த முயற்சியே இப்போது எனக்கு வெளிப்படுகிறது. இதையெல்லாம் ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்றால்? கடந்த பிறவிகளில் நாம் சம்பாதித்த ஞானம் இந்தப் பிறவிக்கும் தொடரும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான்.

எனக்கு மட்டுமல்ல, நீங்கள் சம்பாதித்த ஞானம் உங்களோடு வரும். அதனால்தான் நான் உங்கள் அனைவரையும் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் என்று கூறுகிறேன்.

ஏனென்றால், நீங்கள் அனைவரும் ஞானத் தேடலோடு என்னிடம் வந்திருக்கிறீர்கள். இவ்வளவு சிரத்தையுடன் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான மக்கள் இதில் பங்கேற்கிறீர்கள். உங்களிடம் ஆர்வம் இல்லையென்றால் வரமாட்டீர்கள் அல்லவா? அதிகாலை வேளையில் ஜூம் வழியாக மட்டுமல்லாமல், ஒவ்வொரு மாதமும் பீமாவரம் வகுப்பிற்கும் கூட வருகிறீர்கள். ஆனால் இப்போது நீங்கள் செய்யும் இந்தப் பணி, நீங்கள் படும் கஷ்டம், உங்கள் முயற்சி வீண் போகாது. நிச்சயமாக உங்கள் எதிர்காலத்தில் இது உங்களுக்கு மிகுந்த நன்மையை அளிக்கும். உங்களை மிக விரைவாக உங்கள் வாழ்வின் இலக்கை அடையச் செய்யும்.

எனவே, உங்கள் சூழ்நிலைகளைப் பார்த்து, அதாவது பொருளாதாரம், ஆரோக்கியம், குடும்பம் அல்லது சமூகரீதியாக உங்கள் நிலையைப் பார்த்து நீங்கள் வருத்தப்படத் தேவையில்லை. இந்த ஆன்மீக மார்கத்திற்கு வந்ததே நீங்கள் பெருமைப்பட வேண்டிய விஷயம். பாருங்கள், இந்த உலகில் எத்தனையோ கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் எத்தனை பேர் இந்த ஞான மார்க்கத்திற்கு வருகிறார்கள்? இறுதியில் இந்த தியானத்திற்கு வந்தவர்கள் கூட இந்த ஞானத்தை அடைய முயற்சி செய்வதில்லை. அவர்களுக்கு ஞானத்தின் மீது ஆர்வம் இல்லை. அவர்கள் உடல் ரீதியான லாபங்களையும், உலகியல் ஆதாயங்களையுமே பார்த்துக் கொள்கிறார்கள், அதற்காகவே தியானமும் செய்கிறார்கள். அதனால்தான் இந்த ஞான மார்க்கத்திற்கு

வந்துள்ள நீங்கள் மிகவும் அரிதானவர்கள் என்று கூறுகிறேன்.

எனவே, உங்களுக்குள் இருக்கும் சில பழக்கங்களையும், சம்ஸ்காரங்களையும் நீக்குவதற்காகவே நான் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். சில நேரங்களில் சற்றுக் கடினமாகப் பேச வேண்டியிருக்கும். ஆனால் நீங்கள் அனைவரும் ஒரு சிறந்த நிலையில் இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் பத்ரிஜி அவர்கள் விஷயத்தில் கூட இதைப் பார்த்திருக்கிறேன். அவர் என்னை ஒருபோதும் புகழ்ந்தது கிடையாது. நான் எவ்வளவு சிறந்த காரியம் செய்தாலும், எது செய்தாலும் புகழ மாட்டார். "ஏன் இவர் ஒருமுறை கூட எதுவும் சொல்வதில்லை?" என்று இடையில் நான் நினைப்பதுண்டு.

பிறகுதான் எனக்குப் புரிந்தது - அவரே புகழ்ந்தால் எனக்கு அகங்காரம் அதிகரித்து விடும் என்று. ஆனால் அவரது செயல்களின் மூலம் அவருக்கு நான் என்றால் மிகவும் பிடிக்கும் என்பதை உணர்ந்து கொண்டேன். அதனால் அவரிடமிருந்து புகழ்ச்சியை எதிர்பார்க்கும் ஆளாக நான் இருந்ததில்லை.

எனவே, நினைவில் கொள்ளுங்கள். இப்போது நாம் எந்த ஞானத்தைப் பற்றிப் பேசுகிறோமோ, அந்த ஞானம் நம்முடன் கூடவே வரும். இந்த ஞானத்தினால் நமக்கு நன்மையே நடக்கும், மிகப்பெரிய லாபமான மோட்சமே கிடைக்கும். எனவே நமக்குக் கிடைத்துள்ள சிறிதளவு ஞானத்துடன் திருப்தி அடைந்து விடாமல், அந்த ஞானத்தை மென்மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும், இன்னும் வளர வேண்டும்.

அதற்கு வசிஷ்டர் அவர்கள் கூறிய ஆன்மீகத் திரிரத்தினங்களான 1) சாதனை 2) சுவாத்தியாயம் (சுய கற்றல்) 3) சாங்கத்தியம் (நல்லோர் சேர்க்கை) ஆகிய

மூன்றையும் மனமொழி மெய்களால் (திரிகரண சுத்தியாக) கடைப்பிடித்து, நம்மால் இயன்ற முயற்சியைச் செய்ய வேண்டும்.

எனவே, உண்மையில் ஞானம் என்றால் என்ன? ஞானம் அடைந்தவர்களின் நடத்தை எப்படி இருக்கும்? ஞானம் அடையாமல் அறியாமையில் இருப்பவர்களின் நடத்தை எப்படி இருக்கும்? இந்த விஷயங்களைத் தெரிந்து கொள்வோம். அப்போது நாம் எந்த நிலையில் இருக்கிறோம்? அதில் எவற்றைக் கடைப்பிடிக்கிறோம்? இன்னும் எவற்றை கடைப்பிடிக்க வேண்டும்? இவை அனைத்தும் நமக்குத் தெளிவாக புரியும். அப்போது நாம் அவற்றைச் சம்பாதித்துக்கொண்டு கடைப்பிடிப்போம். இதற்கு யாரும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஞானம் வளர்ந்ததா இல்லையா? என்பது உங்கள் நடத்தையை நீங்களே கவனித்தால் உங்களுக்கே தெரியும்.

எனவே அவற்றைத் தெரிந்துகொண்டால், எதில் நாம் பலவீனமாக இருக்கிறோம்? எவற்றைக் கடைப்பிடிக்கிறோம்? இன்னும் எவற்றை நாம் சரிசெய்து கொள்ள வேண்டும்? இவையெல்லாம் நமக்கு நன்றாகப் புரியும். ஏனென்றால் ஞானம் பெறுபவர்களின் நடத்தையில் பெரும் மாற்றம் இருக்கும், சிந்திக்கும் முறையில் மாற்றம் இருக்கும், பேசும் முறையில் மாற்றம் இருக்கும், செய்யும் செயல்கள் மற்றும் ஆசைகளில் கூட பெரும் மாற்றம் இருக்கும்.

முதலில் ஞானம் என்றால் என்னவென்று தெரிந்துகொள்வோம். ஞானம் என்பது 'உள்ளதை" அங்கீகரிப்பதாகும். அவ்வாறு அங்கீகரித்ததைச் செயல்படுத்துவதே 'விஞ்ஞானம்'. சிருஷ்டியில் உள்ளது 'ஆன்மா' ஒன்றுதான். மற்றவை அனைத்தும் இல்லாதவை. எனவே அத்தகைய ஆன்மா தொடர்பான

ஞானத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். அந்த ஞானத்தால்தான் நாம் துக்கத்திலிருந்து விடுபட முடியும்.

உலகத்தைப் பார்த்தால் பலர் துக்கத்தில் இருக்கிறார்கள். சிலர் ஆனந்தமாக வாழ்கிறார்கள், சிலர் மற்றவர்களுக்குச் சேவை செய்து கொண்டிருக்கிறார்கள், இன்னும் சிலர் மற்றவர்களுக்குத் தீங்கு விளைவித்து நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறே சிலர் பாவங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள், சிலர் நல்ல காரியங்களைச் செய்கிறார்கள்.

மேலும் உலக சூழலை நாம் கவனித்தால், பலர் கடவுள் யார் என்று தெரியாமலே ஆராதனை செய்து கொண்டிருக்கிறார்கள், மிகச் சிலரே இறைவனின் ஆன்ம தத்துவத்தைத் தெரிந்து கொண்டு, அதற்கு ஏற்றவாறு தியான சாதனை செய்கிறார்கள். அப்படியானால் மனிதர்களின் நடத்தை இப்படி இருப்பதற்குக் காரணம் என்ன?

மனிதர்களுக்குக் இறைவனைப் பற்றியும், இறைவனின் படைப்பைப் பற்றியும் ஞானம் இல்லாததே இதற்கு காரணம். அத்தகைய ஞானம் இல்லாதவர்களை 'அஞ்ஞானிகள்' என்பார்கள். ஞானம் உள்ளவர்களை 'ஞானிகள்' என்பார்கள். எனவே நாம் கவனித்தால், இறைவனின் படைப்பைப் பற்றிய ஞானம் உள்ளவர்களின் நடத்தை ஒரு விதமாகவும், அது இல்லாதவர்களின் அதாவது அஞ்ஞானிகளின் நடத்தை வேறொரு விதமாகவும் இருக்கும்.

ஒரு விதமாகச் சொன்னால், எவருக்காவது கஷ்டங்கள் இருக்கின்றன என்றால் அவர்கள் படைப்பிற்கும், படைப்பின் தர்மங்களுக்கும் விரோதமாக செயல்படுகிறார்கள் என்று அர்த்தம். அவ்வாறு, அவர்கள் செயல்படுவதற்கு அவர்களின் அறியாமையே காரணம். எனவே, இந்தத் துக்கத்திலிருந்து விடுபட வேண்டுமானால்

அறியாமையை நீக்கிக் கொள்ள வேண்டும், ஞானம் பெற வேண்டும், ஆன்மீகத் திரிரத்தினங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அப்போது எவரொருவரிடமும் மெதுவாக ஞானம் பெருகும். அவ்வாறு ஞானம் பெருகப் பெருக என்னென்ன மாற்றங்கள் வரும் என்பதை இப்போது தெரிந்துகொள்வோம்.

1) பொதுவாகவே ஒரு ஞானி உலக விஷயங்களின் மீது பற்றற்ற நிலையில் இருப்பார். உலக விஷயங்கள் என்றால் குடும்பம், செல்வம், குழந்தைகள் ஆகியவற்றின் மீது ஞானிக்கு அதிக ஆர்வம் இருக்காது.

ஆனால் ஒரு அஞ்ஞானி உலக விஷயங்களின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பார். ஆன்ம விஷயங்களின் மீது பற்றின்மையை வெளிப்படுத்துவார், அதாவது அதில் விருப்பம் இருக்காது. ஆன்மாவைப் பற்றிச் சொன்னாலோ, ஞானத்தைப் பற்றிப் பேசினாலோ அவருக்குச் சலிப்பு ஏற்படும்.

இங்கு ஞானிகளும் அஞ்ஞானிகளும் கூட வெவ்வேறு நிலைகளில் இருப்பார்கள். நீங்கள் உலக விஷயங்களின் மீது எவ்வளவு பற்றின்மையை வெளிப்படுத்துகிறீர்களோ, நீங்கள் அவ்வளவு ஞானம் பெற்றுள்ளீர்கள் என்று அர்த்தம். இதைப் பற்றி யாரிடமும் கேட்கத் தேவையில்லை.

பெரியவர்கள் சொல்வார்கள் அல்லவா, "**விஷய விரக்தி, ஆன்ம சுத்தி இருக்க வேண்டும்**" என்று. எனவே, இவை உங்களிடம் எத்தனை சதவீதம் உள்ளன என்று பார்த்துக் கொள்ளுங்கள். அந்தச் சதவீதத்தை அதிகரிக்க முயற்சி செய்யுங்கள்.

இங்கு விரக்தி என்றால் அனைத்தையும் விட்டுவிடுவது என்று அர்த்தமல்ல. 'மமகாரம்' (எனது என்ற எண்ணம்) இல்லாமல் இருப்பதாகும். பத்ரிஜி

அவர்கள் குடும்பத்தை விடச் சொல்லி யாரிடமும் கூறவில்லை, சம்பாத்தியத்தை விடச் சொல்லியோ அல்லது சுகங்களை விடச் சொல்லியோ அவர் கூறவில்லை. அனைத்தையும் அனுபவித்துக் கொண்டே, நாம் செய்ய வேண்டிய கடமையை நாம் செய்ய வேண்டும் என்று அவர் கூறினார். "சம்சாரத்தில் நிர்வாணம்" என்று ஆச்சார்ய நாகார்ஜுனர் சொன்னதை பத்ரிஜி நமக்கு எடுத்துரைத்தார்.

2)ஞானி துக்கத்திலும் கூட ஆனந்தமாக வாழ்வார். ஆனால் அஞ்ஞானி ஆனந்தமாக இருக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் கூடத் துக்கப்படுவார்.

ஞானம் பெற்றவர் துக்கம் வந்தாலும் வருத்தப்பட மாட்டார். "என் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே" என்று வேதனைப்பட மாட்டார். எப்போதும் போல ஆனந்தமாகவே இருப்பார். ஆனால் ஞானி எப்போதும் மற்றவர்களுக்கு ஏதோ ஒரு சேவையைச் செய்வார், உபகாரம் புரிவார்.

எனவே அழுதுகொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்கள் அஞ்ஞானத்தில் இருக்கிறார்கள் என்று அர்த்தம். அத்தகையவர்களுக்கு உண்மையில் உதவி தேவைப்பட்டாலும் அவர்களால் அதைச் செய்ய முடிவதில்லை.

3) ஞானி ஆசைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார். ஆனால் அஞ்ஞானி ஆசைகளுக்கு அடிமையாக இருப்பார்.

ஞானி ஆசைகளை ஏன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்? என்றால் "மூச்சின் மீது கவனம்" எனும் தியானத்தை தீவிரமாக செய்வதால் மனம் கட்டுப்பாட்டில் இருக்கும். மனம் கட்டுப்பாட்டில் இருந்தால் ஆசைகளும் கட்டுப்பாட்டில் இருக்கும்.

அஞ்ஞானி தியானம் செய்ய மாட்டார், அதனால் அவர் மனம் கட்டுப்பாட்டில் இருக்காது. மனம் கட்டுப்பாட்டில் இல்லாதவருக்கு ஆசைகள் மட்டுமல்ல,

'அரிஷட் வர்க்கங்கள்' (காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறு தீய குணங்கள்) கூடக் கட்டுப்பாட்டில் இருக்காது.

4) ஞானி பேராசைப்பட மாட்டார். ஆனால் அஞ்ஞானி எல்லாவற்றிற்கும் பேராசைப்படுவார்.

ஞானி இவரைப் பார்த்தோ, அவரைப் பார்த்தோ, அதைப்பார்த்தோ, இதைப்பார்த்தோ ஆசைப்பட மாட்டார். ஆனால் அஞ்ஞானி காண்பதையெல்லாம் தனக்கு வேண்டும் என்று நினைப்பார். எத்தனை இருந்தாலும் அவருக்குத் திருப்தி ஏற்படாது.

சமீபத்தில் யூடியூப்பில் பார்த்தேன். சினிமா நடிகர் பிரபாஸிடம் 10 கார்கள் இருக்கின்றனவாம். 9 கோடி, 8 கோடி, ஒன்று 6 கோடி விலையுள்ள கார்கள் இருப்பதாக யூடியூப்பில் போட்டிருந்தார்கள். அப்படியானால் அத்தனை கார்களிலும் அவர் சுற்றுவாரா என்றால் எப்படி சுற்றுவார்?

முகேஷ் அம்பானிக்கு மும்பையில் ஒரு கட்டிடம் உள்ளது. அந்த 24 அடுக்கு மாடி கட்டிடத்தில் ஆறு அடுக்குகள் பழைய கார்களை நறுத்துவதற்கே (Parking) ஒதுக்கப்பட்டிருக்கிறதாம். இதிலிருந்து அவரிடம் எத்தனை கார்கள் இருக்கும் என்று சிந்தித்து பாருங்கள்.

இவையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால்? யாராக இருந்தாலும் சரி, தன்னிடம் இருப்பதை கொண்டு திருப்தி அடைந்து, தன் எல்லைக்குள் தான் வாழ வேண்டும். மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. ஏனென்றால், உங்களுக்குக் கிடைப்பது ஞானம், உங்களுடன் வரப்போவதும் ஞானம். அதை வளர்த்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அதை விடுத்து, இல்லாதவற்றைப் பற்றி நமக்கு ஏன் கவலை? பெருமைகள் எதற்கு? எவர் எதைச் செய்துகொண்டால் நமக்கென்ன?

5) ஞானி ஞானத்தை வளர்த்துக்கொள்வார். அந்த ஞானமே அவரைப் பாதுகாக்கும். ஆனால் அஞ்ஞானி

செல்வத்தை வளர்த்துக்கொள்வார். அந்தச் செல்வத்தை அஞ்ஞானிதான் பாதுகாக்க வேண்டும், வேறு யாரும் பாதுகாக்க மாட்டார்கள்.

6) ஞானி தன்னிடம் இருப்பதைக் கொண்டு திருப்தியாக வாழ்வார். ஆனால் அஞ்ஞானிக்கு எவ்வளவு இருந்தாலும் திருப்தி இருக்காது.

7) ஞானி தன்னிடம் உள்ளதைப் பகிர்ந்து கொடுப்பார். ஆனால் அஞ்ஞானியால் எதையும் பகிர முடியாது. ஞானி தன்னிடம் எவ்வளவு இருக்கிறதோ, அதில் ஒரு பங்கைப் பகிர்ந்து கொடுப்பார். ₹100 ரூபாய் இருந்தால் ₹10 ரூபாய் கொடுப்பார். இலட்சம் இருந்தால் ஆயிரம் அல்லது பத்தாயிரம் கொடுப்பார். ஆனால் பகிர முடியவில்லையென்றால், அவர்கள் இன்னும் அஞ்ஞானத்தில் இருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம்.

8) ஞானியால் கொடுக்காமல் இருக்க முடியாது. அவர் கொடுத்துக்கொண்டே இருப்பார். ஆனால் அஞ்ஞானியால் கொடுக்க முடியாது.

9) ஆன்ம ஞானி அனைவரும் ஒன்று என்று நினைப்பார். ஆனால் அஞ்ஞானி அனைவரும் வேறு வேறு என்று நினைப்பார்.

10)ஆன்ம ஞானி அனைவரையும் நேசிப்பார். தன்னுடையவர்கள் உட்பட அனைவரையும் சமமாகவே கருதுவார். ஆனால் அஞ்ஞானி அனைவரையும் வெறுப்பார். தன்னுடையவர்களைத மட்டும் தனிப்பட்ட விதமாகப் பார்ப்பார். மற்றவர்களை வேறு விதமாகப் பார்ப்பார். ஒரு விதமான விருப்பு வெறுப்புகளை (ராகத்வேஷங்கள்) வெளிப்படுத்துவார்.

11) ஞானி மற்றவர்களுக்காகச் சிந்திப்பார். பத்ரிஜி அவர்கள் தனக்காக சிந்திப்பதை விட மக்களுக்காகவே அதிகம் பாடுபட்டார். ஆனால் அஞ்ஞானி தனக்காகவும் தன் குடும்பத்தினருக்காகவும் மட்டுமே சிந்திப்பார்.

12) ஞானி மற்றவர்களின் மகிழ்ச்சிக்காகப் பாடுபடுவார். ஆனால் அஞ்ஞானி தன் சொந்த மகிழ்ச்சியை மட்டுமே பார்த்துக் கொள்வார்.

13) ஞானி உலக நன்மைக்கான (லோக கல்யாண) காரியங்களைச் செய்வார். அவற்றை ஊக்குவிப்பார், அதற்கு ஒத்துழைப்பார். ஆனால் அஞ்ஞானி அத்தகைய காரியங்களைச் செய்யவும் மாட்டார், ஊக்குவிக்கவும் மாட்டார், ஒத்துழைக்கவும் மாட்டார்.

14) ஞானி செய்யக்கூடாத செயல்களைச் செய்ய மாட்டார். அதனால்தான் அவருக்குக் கஷ்டங்கள் வராது. மேலும், செய்ய வேண்டிய செயல்களையே செய்வார். அனைவருக்கும் லாபம் தரும் செயல்களையே செய்வார். எனவே எதிர்காலம் முழுவதும் ஆனந்தமே, அனைத்தும் லாபமே, துக்கம் இருக்காது.

ஆனால் அஞ்ஞானி செய்யக்கூடாத செயல்களைச் செய்வார். அனைவருக்கும் நஷ்டம் தரும் செயல்களைச் செய்வார், இறுதியில் கஷ்டங்களுக்கு ஆளாவார், துக்கத்தில் வாழ்வார்.

15) ஞானி மற்றவர்களின் உயர்வையும், சிறப்புகளையும் காண்பார். ஆனால், அஞ்ஞானி மற்றவர்களிடம் உள்ள குறைகளையே காண்பார். எவர் மற்றவர்களிடம் குறைகளைத் தேடுகிறாரோ, அவர் அஞ்ஞானி என்று கருதப்படுவார்.

16)ஞானி தான் செய்யும் செயல் தர்மமானதா இல்லையா என்று சிந்திப்பார். தன்னைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று அவர் கவலைப்பட மாட்டார். தான் செய்தது சரியா இல்லையா என்பதை மட்டுமே அவர் பார்ப்பார்.

ஆனால், அஞ்ஞானி மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற பயத்தில் செய்ய வேண்டிய அவசியமான காரியத்தைக் கூட செய்ய மாட்டார்.

17) ஞானி 'அரிஷடவர்கங்களை' காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறு தீய குணங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார். ஆனால், அஞ்ஞானிக்கு இவை கட்டுப்பாட்டில் இருக்காது.

18) ஞானிக்கு 'திரிகரண சுத்தி' (மனம், வாக்கு, செயல் ஆகியவற்றில் தூய்மை) இருக்கும். ஆனால், அஞ்ஞானிக்கு அது இருக்காது.

19) ஞானிக்கு தர்மம் தெரியும், தர்மத்தின் வழியில் நடப்பார். ஆனால், அஞ்ஞானிக்கு தர்மம் தெரியாது, அதன்படி நடக்கவும் மாட்டார்.

20) ஞானி இருமைகளிலும் (இன்ப-துன்பம் போன்றவை) சமநிலை தவறாமல் இருப்பார். (இருமைகள் என்றால்: குளிர்-வெப்பம், வெற்றி-தோல்வி, நிந்தை-புகழ், சுகம்-துக்கம், மானம்-அவமானம்). ஆனால், அஞ்ஞானிக்கு இவற்றில் சமநிலை இருக்காது.

21) ஞானிக்கு தான் பேசும் வார்த்தையின் மீது விழிப்புணர்வும், கட்டுப்பாடும் இருக்கும். ஆனால், அஞ்ஞானிக்கு இவை இரண்டும் இருக்காது.

22) ஞானி படைப்பின் விதிகள், தர்மங்கள் மற்றும் சித்தாந்தங்களையும் தெரிந்து கொண்டு அதன்படி நடப்பார். ஆனால், அஞ்ஞானி அவற்றைத் தெரிந்து கொள்ளவும் மாட்டார், அதன்படி நடக்கவும் மாட்டார்.

23)ஞானி இயற்கையோடு (படைப்போடு) இணைந்து வாழ்வார். ஆனால், அஞ்ஞானி இயற்கைக்கு எதிராக வாழ்வார். ஏனென்றால், அஞ்ஞானிக்கு இவை எதுவும் தெரியாது.

24) ஞானி இயற்கையின் முடிவுகளை மதிப்பார். ஆனால், அஞ்ஞானி இயற்கையின் முடிவுகளை மதிப்பதில்லை, மாறாக விமர்சிப்பார். அதன் மூலம் அவர் இயற்கையை அவமதிப்பவர் ஆகிறார் மற்றும் நஷ்டமடைகிறார்.

நீங்கள் பாருங்கள், பலத்த மழை பெய்தால் என்ன சொல்வார்கள்? "பாழ் மழை" என்பார்கள். அந்த மழை ஏன் பெய்கிறது? அதற்கான காரணம் என்ன? இயற்கை ஏன்

அப்படி ஒரு முடிவை எடுத்தது? என்று இவர்களுக்கு என்ன தெரியும்.

அதேபோல், கடுமையான வெயில் அடித்தால் "பாழ் வெயில், உயிர் போகிறது" என்பார்கள். அவ்வாறு இயற்கையில் நடப்பவற்றை அவர்கள் விமர்சிப்பார்கள். ஆனால், இயற்கையில் நடப்பவை அனைத்தையும் நாம் மதிக்க வேண்டும். அவ்வாறு செய்யாத அஞ்ஞானி, இயற்கையை அவமதிப்பவர் ஆகிறார் மற்றும் நஷ்டமடைகிறார்.

எனவே, இதில் எவற்றையாவது நீங்கள் இன்னும் பின்பற்றவில்லை என்றால், அவற்றைப் பற்றிய புரிதல் இன்னும் உங்களுக்கு ஏற்படவில்லை என்று உணர்ந்து கொள்ளுங்கள். எனவே, அவற்றைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

பாருங்கள், அஞ்ஞானி தர்மத்தைக் கடைபிடிக்க மாட்டார். காரணம், அவருக்கு தர்மம் என்றால் என்னவென்று தெரியாது. மேலும் தர்மத்தைக் கடைபிடிக்காவிட்டால் ஏற்படும் நஷ்டங்களைப் பற்றியும் அவருக்குத் தெரியாது. அவற்றின் விளைவுகள் எவ்வளவு தீவிரமாக இருக்கும் என்பதும் அவருக்குப் புரியாது.

எனவே, மேலே குறிப்பிட்டவற்றில் எதையாவது நீங்கள் பின்பற்றவில்லை என்றால், அவற்றைப் பற்றி நன்றாக ஆய்வு செய்ய வேண்டும். இயற்கையின் கோட்பாடுகள் மற்றும் விதிகளைப் பற்றியும் தெரிந்து கொள்ளுங்கள். ஒருவேளை நமக்கு அவகாசம் இல்லையென்றால், அவற்றைத் தெரிந்து கொண்டு பின்பற்ற முயற்சி செய்ய வேண்டும். இவை அனைத்தும் ஞானம் உள்ளவர்களுக்குத் தெரியும்.

எனவே, ஞானத்தைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள். ஆன்மீக 'திரிரத்னங்களை' (தியானம், சத்சங்கம், சுவாத்யாயம்) பின்பற்றுங்கள்.

# ஞானம் பெறுவதால் உண்டாகும் நன்மைகள்

இந்த ஞானம் நம்முடன் மரணத்திற்குப் பிறகும் வரும் என்பதால், இந்த ஞானத்தின் மீது ஒருவருக்கு ஆர்வம் வர வேண்டுமென்றால், முதலில் ஞானம் பெறுவதால் கிடைக்கும் நன்மைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இப்போது இந்த தியானத்திற்குள் பல லட்சக்கணக்கான மக்கள் வந்துள்ளனர். ஆனால் மிகச் சிலரே ஞானத்திற்கு முக்கியத்துவம் தருகின்றனர். காரணம், இந்த தியானத்திற்கு வந்தவர்கள் உடல் ரீதியான நன்மைகள், கோரிக்கைகள், பிரச்சனைகள், அனுபவங்கள் மற்றும் சக்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். "எனக்கு அவர் காட்சியளித்தார், இவர் காட்சியளித்தார், முன் ஜென்மங்களைப் பார்த்தேன், எனக்கு மூன்றாவது கண் திறந்துவிட்டது" என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஆனால் தியானம் செய்வது இவை அனைத்திற்காகவும் கிடையாது. தியானம் என்பது ஞானத்திற்காகவே. தியானம் செய்து கொண்டே இருந்தால், ஞானம் பெறுவதற்கு முன்னால் இது போன்ற பல விஷயங்கள் வரும்.

உதாரணமாக, யாராவது ஒரு மில்லில் நெல்லைப் போடுவது அரிசிக்காகத்தான். மாறாக உமிக்காகவோ, தவிட்டிற்காகவோ, குருணைக்காகவோ போடமாட்டார்கள். நெல்லை போட்டவன் அரிசியைப் பார்க்காமல் உமி, தவிடு, குருணையைப் பார்த்துப் பூரிப்படைந்தால் அவனை என்னவென்று சொல்வது!

அதேபோல் தியானம் செய்பவன் தனக்கு ஞானம் வந்ததா இல்லையா என்று பார்க்க வேண்டும். அதை விட்டுவிட்டு "எனக்கு நோய் குணமாகிவிட்டது, என்

ஆசைகள் நிறைவேறிவிட்டன, எனக்கு அனுபவங்கள் வந்தன, எனக்கு அந்த லாபம் கிடைத்தது" என்றால்... அவையெல்லாம் பெரிய லாபங்களா? தியானம் செய்து ஞானத்தைச் சம்பாதிப்பதற்குள் இவை அனைத்தும் இயற்கையாகவே வரும். அவை அனைத்தையும் 'பை-பிராடக்ட்ஸ்' (By-products - துணை விளைபொருட்கள்) என்பார்கள்.

நெல்லை அரைக்கும்போது அரிசி என்பதுதான் அசல் பொருள் (Main Product), அதற்கு முன்னால் வரும் உமி, தவிடு, குருணை ஆகியவை துணை விளைபொருட்கள் (By-products). அப்படியிருக்க, அரிசியைப் பார்க்காமல் உமியைக் கண்டு திருப்தியடைந்தால் அவனை என்ன சொல்வது? அசலை விட்டுவிட்டு நகலைப் (உபரியை) பார்த்துத் திருப்தியடைபவன் அறிவற்றவன், இல்லையென்றால் வேறு யார்?

அதேபோல், தியானம் செய்யும் போது ஞானம் பெறுவதற்கு முன்னால் வருபவை அனைத்தும் துணை விளைபொருட்கள் (By-products). அசல் பொருள் (Main Product) எதுவென்றால் அது ‘ஞானம்'. இந்த ஞானத்தை கவனிக்காமல், நோய் குணமாகுதல் அல்லது வேறு லாபங்களை எதிர்பார்ப்பவன் அறிவில்லாதவன் என்று சொல்வார்கள்.

எனவே, ஞானத்தின் மகத்துவத்தை இப்போது தெரிந்து கொள்வோம். ஞானம் அடைந்தால் கிடைக்கும் நன்மைகள் என்னவென்று தெரியாமல், மக்கள் நோய்கள் மீதும், பணம், குடும்பம் மற்றும் சொத்துக்கள் மீதும் கவனம் செலுத்துகிறார்கள். ஆனால் ஒருவர்கூட ஞானத்தின் மீது கவனம் செலுத்துவதில்லை. எனவே, முதலில் இந்த ஞானத்தினால் கிடைக்கும் நன்மைகள் என்னவென்று தெரிந்து கொள்வோம்.

ஞானம் அடைந்தால் முக்கியமாக இரண்டு வகையான நன்மைகளைப் பெறலாம்.

1) இஹலோகத்தில் (இவ்வுலகில்) பெறும் நன்மைகள்.

2) பரலோகத்தில் (மறுவுலகில்) பெறும் நன்மைகள்.

இவ்விரண்டைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன்னால், 'ஞானம்' என்றால் என்னவென்று தெரிந்து கொள்வோம்.

ஞானம் என்றால் "இருப்பதை உணர்வது". இந்த ஞானத்தின் உச்சநிலையை 'விஞ்ஞானம்' என்பார்கள். 'விஞ்ஞானம்' என்றால் உணர்ந்ததை ஆசாரிப்பது (பின்பற்றுவது).

அப்படியானால் இந்த சிருஷ்டியில் (படைப்பில்) இருப்பது எது? இருப்பது ஒன்றே ஒன்றுதான். அதுதான் 'ஆன்மா' (Athma). 'ஆன்மாவை' உணர்வதே, 'ஆன்மாவைப்' பற்றித் தெரிந்து கொள்வதே 'ஞானம்'. பத்ரிஜி அவர்கள், "நான் உடல் அல்ல, நான் ஆன்மா" என்று தெரிந்து கொள்வதே 'ஞானம்' என்று கூறியுள்ளார். ஏனெனில், இந்தப் சிருஷ்டியில் இருப்பது 'ஆன்மா' மட்டுமே. அப்படிப்பட்ட ஆன்மாவை யாரெல்லாம் உணர்கிறார்களோ, தெரிந்து கொள்கிறார்களோ அவர்களே ஞானிகள்.

மற்றவர்கள் அனைவரும் அஞ்ஞானிகளே. அப்படி ஆன்மாவை உணர்ந்தவர்கள் பிரச்சனைகளில் இருந்தும், வலிகளில் இருந்தும், துக்கங்களில் இருந்தும் விடுபடுவார்கள். ஆன்மாவைப் உணராதவர்கள் அஞ்ஞானத்திலேயே இருப்பார்கள். அவர்கள் எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் எல்லையற்ற துக்கத்தோடு நரகத்தை அனுபவிப்பார்கள்.

எனவே, இந்த 'ஞானம்' அடைந்தால் கிடைக்கும் நன்மைகளைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

**1) இஹலோகத்தில் (இவ்வுலகில்) கிடைக்கும் நன்மைகள்**:-

1) "நான் உடல் அல்ல, ஆன்மா" என்பது ஒரு ஞானிக்குத் தெளிவாகத் தெரியும். அதுமட்டுமல்லாமல்,

தான் மட்டுமல்ல மற்ற அனைவரும் ஆன்மாக்களே என்பதும் அவருக்கு நன்றாகப் புரியும்.

2) அனைவரும் ஆன்மாக்களே என்று ஞானி தெரிந்து கொள்வதால், அனைவரும் ஒன்றே, அனைவரும் சமமானவர்களே என்ற புரிதல் உண்டாகும்.

அன்னமாச்சாரியார் அவர்கள் கூறியுள்ளார்கள் அல்லவா? "பிரம்மும் ஒன்றே பரபிரம்மமும் ஒன்றே" என்று கூறிக்கொண்டு.. "தாழ்ந்தவர் உயர்ந்தவர் என்று எங்கும் இல்லை, அனைவருக்கும் அந்த ஸ்ரீஹரியே அந்தராத்மா" என்று சொல்லியிருக்கிறார்.

அதாவது இந்தப் படைப்பில் தாழ்ந்த ஜாதி, உயர்ந்த ஜாதி என்று எதுவுமே இல்லை. தாழ்ந்தவன், உயர்ந்தவன் என்று யாரும் இல்லை. காரணம், அனைவருக்கும் அந்த ஸ்ரீஹரியே, அந்த பகவானே அந்தராத்மாவாக இருக்கிறார். அதாவது உள்ளுக்குள் இருக்கும் 'ஆன்மா' என்று அன்னமாச்சாரியார் அவர்கள் எவ்வளவு தெளிவாக் கூறியுள்ளார்! இந்த விஷயம் ஞானிக்குத் தெளிவாகப் புரியும். எனவே இதை உணர்ந்த ஞானி யாரையும் வெறுக்க மாட்டார், அவமதிக்க மாட்டார், ஏமாற்ற மாட்டார், யாருக்கும் நஷ்டத்தையோ , கஷ்டத்தையோ விளைவிக்க மாட்டார்.

3) ஞானி எந்த உயிரினத்தையும் துன்புறுத்த மாட்டார். முக்கியமாக வன்முறைக்கு (ஹிம்சை) காரணமான மாமிச உணவை உட்கொள்ள மாட்டார். அதன் காரணமாக, அவருக்கு நோய்களோ கஷ்டங்களோ வராது.

4) ஒரு ஞானியின் வாழ்க்கையில் கஷ்டங்கள் இருக்காது. ஒருவேளை கஷ்டங்கள் வந்தாலும், அவர் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும், ஆனந்தமாகவும் வாழ முடியும்.

5) ஞானி அனைவருடனும், அதாவது அனைத்து உயிரினங்களுடனும், மனிதர்களுடனும் நட்புடன் இருப்பார். அப்படிப்பட்ட ஞானிகள் காடுகளில் தவம் செய்து கொண்டிருக்கும் போதும் அல்லது தியான சாதனை செய்யும் போதும், கொடிய மிருகங்கள் வந்தாலும் அவர்களை ஒன்றும் செய்யாது.

6) ஞானி உடலுக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார். ஆன்மாவுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பார். ஏனெனில் உடல் நிரந்தரமானது அல்ல, அது நிலைக்காது. எனவே இந்த உடலைக் கொண்டு ஆன்மாவிற்கு நன்மை விளைவிக்கும் செயல்களையே செய்வார்.

7) ஞானி "மூச்சின் மீது கவனம்" (Anapanasati) வைத்துத் தீவிரமான தியான சாதனையைச் செய்வார்.

8) ஞானி நேரத்தை வீணாக்க மாட்டார். நேரத்தை மட்டுமல்ல, தனது செல்வம், வாக்கு, சக்தி, அறிவு மற்றும் தனது வாழ்க்கை என எதையுமே வீணாக்க மாட்டார். இவை அனைத்தையும் ஆன்மாவின் நன்மைக்காகவே பயன்படுத்துவார்.

9) ஞானி மாயையை வெல்வார். மாயையிலிருந்து வெளியே வருவார்.

10) ஞானம் பெறுவதன் மூலம் தனது கர்மவினைகள் அனைத்தையும் எரித்து விடுவார். துக்கத்திலிருந்து முழுமையாக விடுபடுவார்.

11) ஞானம் பெற்றவர் தான் ஒரு ஆன்மா என்று அறிந்திருப்பதால், தனக்கு மரணம் இல்லை என்பதை அவர் அறிவார்.

12) ஞானிக்கு மரண பயம் இருக்காது. மரணமே இல்லாதபோது மரண பயம் எங்கே இருக்கும்?

13) மரணத்திற்குப் பிறகு என்ன நடக்கும் என்பதை ஞானி முன்னரே தெரிந்து வைத்திருப்பார். அதன் காரணமாக வாழ்க்கையில் பல நன்மைகளைப் பெறுவார்.

14) ஞானி பூமியில் வாழும் போதே, மரணத்திற்குப் பிறகு நன்மைத் தரக்கூடிய செயல்களையே செய்வார்.

15) ஞானிக்கு மரணம் என்பது ஒரு லாபம் என்று தெரியும். ஏனெனில், ஞானம் உள்ளவர் உயர்ந்த உலகங்களை (சொர்க்கம் போன்ற நிலைகளை) அடைவார். பிறகு நல்ல பிறவிகள் கிடைக்கும். எனவே மரணம் ஒரு லாபம் என்பதால் அவர் மரணத்திற்கு அஞ்சமாட்டார். மரணிப்பதற்கு எப்போதும் தயாராக இருப்பார். அதுமட்டுமல்லாமல், தான் எப்போது மரணிப்பேன் என்பதையும் முன்னரே கூறுவார்.

16) ஞானிக்கு மரணத்திற்குப் பிறகு என்ன நடக்கும் என்று தெரிந்து கொள்வதால், வாழ்க்கையில் எல்லாவற்றின் மீதும் உள்ள பற்று நீங்கும். முக்கியமாக மனைவி, பிள்ளைகள், கணவன் மற்றும் செல்வத்தின் மீதான பற்று நீங்கிவிடும்.

17) ஞானிக்கு அனைத்தும் தெரிந்து விடுவதால், அவருக்கு மரணம் என்பது கூட ஒரு கொண்டாட்டமே.

18) ஞானம் பெற்றவர்களின் நடத்தை, செயல்கள், முன்னுரிமைகள், பொறுப்புகள் மற்றும் பேச்சுகள் மாறிவிடும்.

19) ஞானிக்கு பல்வேறு விதமான பௌதிக (உடல் சார்ந்த/உலகியல்) ஈர்ப்புகளின் மீதான மோகம் மறைந்துவிடும். அதாவது பதவிகள், விருதுகள், பரிசுகள், பட்டங்கள் மற்றும் மெடல்கள் போன்ற விஷயங்களின் மீது மோகம் இருக்காது. அவற்றிற்காகத் தன் வாழ்க்கையை வீணாக்க மாட்டார்.

20) மற்றவர்களை விட தான் உயர்ந்தவனாக இருக்க வேண்டும் என்று ஞானி நினைக்க மாட்டார். அந்த

மேன்மையைப் பெறுவதற்காகத் தன் வாழ்க்கையை வீணாக்க மாட்டார். அதுமட்டுமின்றி, அவர் தவறுகள் செய்ய மாட்டார், பாவங்கள் செய்ய மாட்டார், தர்மத்திற்குப் புறம்பாக நடக்க மாட்டார்.

21) ஞானி தன் சக மனிதர்களையும் ஞானிகளாக மாற்ற கடினமாக முயற்சி செய்வார். எனவே, அவர் அனைவரின் பாராட்டுக்களையும், மரியாதையையும் பெறுவார். இதனால் இந்தப் பூமியில் ஞானம் பெற்றவருக்கு பல நன்மைகள் கிடைக்கும்.

**2) பரலோகத்தில் கிடைக்கும் நன்மைகள்:-**

1) ஞானம் பெறுவதால் பற்று நீங்கும். அதனால் மரணத்திற்குப் பிறகு இந்தப் பூமியில் (ஆவியாக) சுற்ற மாட்டார். பூமியில் தனது கடமை முடிந்துவிட்டது என்பதை அவர் அறிந்திருப்பதால், தன்னை அழைத்துச் செல்ல வரும் உதவியாளர்களுடன் மேல் உலகங்களுக்குச் சென்றுவிடுவார்.

2) இந்த மனைவி, குழந்தைகள், செல்வங்கள் என எதுவுமே நிரந்தரமானது அல்ல, அனைத்தும் தற்காலிகமானவை என்ற உண்மை அவருக்குத் தெரியும். அதனால்தான் எதன்மீதும் பற்று வளர்த்துக் கொள்வதில்லை.

இந்த ஞானத்தைப் பெறுவதாலும், மேல் உலகங்களுக்குச் சென்றுவிடுவதாலும், அவர் மரணத்திற்குப் பிறகு 'பிரேத ஆன்மவாக' (அலைந்து திரியும் ஆவியாக) மாறமாட்டார். தான் அடைய வேண்டிய உலகங்களைச் சென்றடைவார். அதன் பிறகு தான் செய்ய வேண்டிய கடமைகள் மீது கவனம் செலுத்துவார்.

இதன் மூலம் எவ்வளவோ நேரத்தைச் சேமிக்க முடியும். பாருங்கள், பிரேத ஆன்மாக்களாக மாறியவர்கள்

சில நூறு ஆண்டுகள் மட்டுமல்ல, பல ஆயிரம் ஆண்டுகளைக் கூட (முன்னேற்றம் இல்லாமல்) வீணடிக்கிறார்கள்.

3) ஞானி தனது வாழ்க்கையின் நோக்கம் பூர்ணாத்மாவாக (முழுமையான ஆன்மா) ஆவதைத் தெரிந்து கொள்கிறார். அதுமட்டுமின்றி, தனது வாழ்வின் இலக்கு 'சத்யலோகம்' அடைவது என்பதையும் புரிந்து கொள்கிறார்.

4) ஞானம் பெறுவதால் இந்தச் சிருஷ்டியில் பல உலகங்கள் இருப்பதை அவர் அறிந்து கொள்கிறார். முக்கியமாக, உயர்ந்த உலகங்களான மஹாலோகம், தபோலோகம் போன்ற உயர் உலகங்களை அடைவது மட்டுமல்லாமல், தனது நோக்கம் இறுதி இலக்கான சத்யலோகத்தை அடைவதே என்று தெரிந்து கொள்வார்.

5) ஞானம் பெறுவதன் மூலம் ஜனலோகம் தாண்டி, அதற்கு மேல் உள்ள உன்னத உலகங்களைச் சென்றடையலாம். அங்குள்ள மகான்களின் சகவாசத்தைப் பெறலாம் என்பதையும், அவர்களிடமிருந்து எவ்வளவோ ஞானத்தைப் பெற முடியும் என்பதையும் அவர் அறிந்து கொள்வார். இவை அனைத்தும் எதிர்காலத்தில் தனக்கு பெரும் நன்மையைத் தரும் என்பதையும் அவர் அறிவார்.

6) ஞானி உன்னத உலகங்களைச் சென்றடைவார். எனவே, மறுபிறவி எடுக்கும்போது தனக்குப் பிடித்தமான பிறவியை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு தனக்கு உண்டு என்பதை அவர் அறிந்து கொள்வார்.

7) ஆன்ம ஞானத்தைப் பெற்றவர்கள், தற்போது தான் இருக்கும் இந்தப் பூமியே தனக்கு பரலோகம் (சொர்க்கம்) என்பதை உணர்வார்கள்.

இவ்வாறு, ஞானம் பெற்றால் இம்மையிலும் (வாழும் போதும்), மறுமையிலும் (மரணத்திற்குப் பிறகும்) எவ்வளவோ நன்மைகளைப் பெறுவார்கள். தனது இலட்சியத்தை

அடைந்து, தனது இலக்கை சென்றடைவார்கள். எனவே நிலை இல்லாதவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள். நிலைத்திருக்கப் போகும் விஷயங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை அவர்கள் தெரிந்து கொள்வார்கள்.

மேலும் வசிஷ்டர் அவர்கள் கூறியுள்ளபடி ஆன்மீகத்தின் மூன்று ரத்தினங்கள் (வழிகள்) எவையென்றால்:

1) மூச்சின் மீது கவனம் (ஆனாபானசதி தியானம்).
2) ஆன்மீகப் புத்தகங்களைப் படித்தல்.
3) ஆன்மீகக் குருமார்களின் போதனைகளைக் கேட்டல்.

இவற்றைத் தவிர்க்காமல் தவறாமல் (Regular-ஆக) செய்ய வேண்டும். ஓய்வு நேரத்தை ஞானம் பெறுவதற்காகவே ஒதுக்க வேண்டும். அதனை வெறும் கேளிக்கைகளுக்காகவோ, பொழுதுபோக்கிற்காகவோ அல்லது நேரத்தைக் கடத்துவதற்காகவோ பயன்படுத்தக் கூடாது.

எனவே யாராக இருந்தாலும், நிலையான நன்மைகளைத் தரக்கூடிய விஷயங்களுக்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

# श्री तटवर्ती वीर राघवराव के हिन्दी किताब

1. आत्म शास्त्र ।......................................................... Rs.200/-
2. ध्यान विद्या ।......................................................... Rs.160/-
3. भगवद् गीता का सार ।............................................... Rs.160/-
4. सत्य मार्ग ।............................................................. Rs.160/-
5. मरने से पहले मरना है।.............................................. Rs.130/-
6. गाईडिंग ध्यान क्यों नहीं ?.......................................... Rs.120/-
7. भगवान कौन है।...................................................... Rs.120/-
8. कर्म सिद्धांत ।.......................................................... Rs.120/-
9. विज्ञान का अर्थ - निहितार्थ ।...................................... Rs.120/-
10. ब्रह्म ज्ञान ।............................................................. Rs.100/-
11. यह जीवन क्यों है ? ................................................. Rs.100/-
12. मेहर बाबा का संदेश । ............................................. Rs.100/-
13. कौन सा ध्यान सही है ? ............................................ Rs.100/-
14. इच्छाओं के कारण होने वाली हानियाँ ........................... Rs.100/-
15. शंकराचार्य जी का ज्ञान संदेश ..................................... Rs.100/-
16. कठोपनिषद्............................................................ Rs.100/-
17. उपमान ज्ञान संदेश ................................................... Rs.100/-
18. शिरडी साई के संदेशों ................................................ Rs.100/-
19. मरने के बाद, साथ में आने वाले विषयों ।...................... Rs.80/-
20. भगवत के दृश्यों का अर्थ ।......................................... Rs.80/-
21. आत्म हंतक कौन होता है ।........................................ Rs.70/-
22. स्त्री जन्मों में सीखने वाले विषयों, पुरुष जन्मों में सीखने वाले विषयों। .................... Rs.70/-
23. दुख निवारण का मार्ग................................................. Rs.75/-
24. उत्तम पुरूष ............................................................ Rs.60/-
25. आर्थिक स्थिति बढाना है तो ? ..................................... Rs.60/-
26. निर्वाण मार्ग ........................................................... Rs.60/-
27. विदुर के संदेशों ....................................................... Rs.50/-
28. ''जीवन में सफलता प्राप्त करने के लिए ?'' ..................... Rs.50/-
29. सत्य...................................................................... Rs.50/-
30. क्या हम इस लोक के वासी हैं या परलोक के वासी हैं ?.......... Rs.50/-
31. गुरू को पहचानना कैसे ?............................................ Rs.50/-
32. विद्यार्थियों के विकास के लिए ध्यान विद्या........................ Rs.50/-
33. शाकाहार ही मानव का आहार है!.................................. Rs.50/-
34. ब्रह्मं क्या है ?........................................................... Rs.50/-
35. शंकराचार्य जी का जाग्रत पंचक .................................... Rs.50/-
36. शंकराचार्य जी का निर्वाण शट्कम ................................. Rs.50/-
37. चैंपियन बनना हो तो ? ............................................... Rs.50/-
38. तीन प्रकार के जीवन.................................................. Rs.50/-
39. संकल्प अर्थात ?........................................................ Rs.40/-

## Tatavarthy Raghavarao Sir Books in English

| | | |
|---|---|---|
| 1. | Life Science (Part-I) | Rs.120 |
| 2. | Why is Guiding Not Meditation ? | Rs.100 |
| 3. | Which is the right meditation ? | Rs.100 |
| 4. | Die before death! | Rs.120 |
| 5. | The Law of Karma | Rs.100 |
| 6. | Losses caused by Desires | Rs.100 |
| 7. | Benefits of knowing what happens after death | Rs.100 |
| 8. | What is Meditation? | Rs.80 |
| 9. | True Path | Rs.80 |
| 10. | Why soul-knowledge ? | Rs.70 |
| 11. | What comes after death ? | Rs.70 |
| 12. | Learnings through the male and female births | Rs.70 |
| 13. | Who are Soul-murderes? | Rs.70 |
| 14. | How to improve Financial Status ? | Rs.60 |
| 15. | Wisdom is attained only through Meditation | Rs.60 |
| 16. | Brahma Jnan | Rs.60 |
| 17. | What is Intention? | Rs.50 |
| 18. | Why is this life? | Rs.50 |
| 19. | Shankaracharya's Jagrata panchakam | Rs.50 |
| 20. | Vegetarian Food Is Human Food | Rs.50 |
| 21. | Brahman means? | Rs.50 |
| 22. | How to become a master? | Rs.50 |
| 23. | How to become a champion ? | Rs.50 |
| 24. | Truth | Rs.50 |
| 25. | Three types of lives | Rs.50 |
| 26. | Are we residents of this world or the other world? | Rs.40 |
| 27. | Meditation for the Development of Students | Rs.40 |
| 28. | Non violence and vegetarianism | Rs.40 |

| | |
|---|---|
| REBIRTH (Tatavarthy Rajya Lakshmi) | Rs.150 |
| What is Ignorance (Avidya) ? | Rs.70 |



இந்த ஜென்மத்தில் நாம் கஷ்டப்பட்டுச் சாதித்தது வீணாகாது; அது மறுபிறவிக்கு மிகவும் பயனுள்ள தாக இருக்கும். இந்தப் பிறவியில் நாம் எதைக் கற்றுக்கொண்டோமோ, எதைச் சாதித்தோமோ, அவை அடுத்த பிறவிக்கு உபயோகப்படும். எனவே, இந்தப் பிறவியில் உழைத்ததோ அல்லது சாதித்ததோ எதுவுமே வீணாகது. பொதுவாக எல்லாரும் என்ன நினைக்கிறார்கள் என்றால், "இறந்துவிட்டால் எல்லாம் முடிந்துவிடும், அதற்கு மேல் ஒன்றும் இருக்காது" என்று நினைக்கிறார்கள்.

ஆனால், இறந்த பிறகும் நாம் இருப்போம். அதுமட்டுமின்றி, நாம் செய்வதையும் அல்லது சாதித்தவையும் வீணாவதில்லை. ஆகவே, மரணத்திற்குப் பிறகு நம்முடன் வருபவை, நாம் பாதிப்பை மற்றும் கற்றுக்கொண்டவை எவை என்று பார்ப்போம்.

நம்மோடு வருபவற்றை நான்கு வகைகளாகச் சொல்லலாம்: அவை 1. வாசனைகள் 2. சம்ஸ்காரங்கள் 3. கர்மாக்கள் 4. ஞானம்.

இங்கே "வாசனைகள்" என்றால் ஒரு விதத்தில் சொன்னால் "விருப்பங்கள்" (ஆசைகள்) என்று சொல்லலாம்.

"சம்ஸ்காரங்கள்" என்றால் "பழக்கவழக்கங்கள்"

"கர்மங்கள்" என்றால் "நாம் செய்த செயல்கள் மற்றும் அவற்றின் பலன்கள்".

"ஞானம்" என்றால் "ஆன்மாவால் பெறப்படுவது" மற்றும் "ஆன்மாவிற்கு உன்னத நிலையைத் தருவது".

இவை அனைத்தும் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும், ஒரு மனிதன் இறந்த பிறகும் அவனுடன் தொடர்ந்து வருகின்றன.

**தட்டவர்த்தி வீரராகவராவ்**

**Scan these QR codes using Google Lens to download the books of Mr. Tatavarthy Veera Raghava Rao & Mrs.Rajyalakshmi from the website.**

| Telugu Books | English Books | Hindi Books | Kannada Books | Tamil Books |
|---|---|---|---|---|